
ஓகஸ்ட் 14 - செப்டெம்பர் 14 2012-5

இது ஒரு மாத இதழ்

விலை ரூபா 100/=


# தின மகுடி



இலங்கை அரசுக்கு ஒரு கதை

அடையாளங்களை அந்தகாரப்படுத்த இடமளிக்கலாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# தாண்டவம்

விக்ரம் கதாநாயகனாக நடித்து வரும் புதிய படம் தாண்டவம். ஏ.எல். விஜய் இயக்கும் இந்தப் படத்தின் டிரைலர் வெளியீட்டு விழா சென்னை ஐநாக்ஸில் நடந்தது. அப் போது விக்ரம் உள்ளிட்ட தாண்டவம் படக்குழுவினர் நிருபர்க ளுக்கு பேட்டியளித்தனர். விக்ரம் கூறுகையில்,

"இது ஒரு மாறுபட்ட படம். எனக்கு இதில் இரட்டை வேடங்கள் என்று சொல்ல முடியாது. இரட்டை வேடங்கள் போல் தோன்றும் ஒரு மாறுபட்ட கதாபாத்திரத்தில் நடிக்கிறேன். ரோ (உளவுப் பிரிவு) அதிகா ரியாக நடிக்கிறேன். படத்தில் எனக்கு இரண்டு ஜோடி. முதல் பாதியில் எமிஜாக்சன் வருவார். இரண்டாம் பாதி யில் அனுஷ்கா வருவார். இரு வருக்குமே சமமான கேரக்டர்கள். அருமையாக நடித்துள்ளனர்.

தமிழ் பட உலகின் மிக சிறந்த டைரக்டர்களில் விஜய்யும் ஒருவர். இனிமையான மனிதர். நல்ல நண்பர். நல்ல சகோதரர். தயாரிப்பாளர் டைரக்டர் என்றார். உங்களுக்கும் எமி ஜாக்ச னுக்கும் முத்த காட்சி இருக்கிறதா? என்ற கேள்விக்கு "இந்த படத்தில் இல்லை. வேண்டு மானால் ஷங்கரிடம் சொல்லி ஐ படத்தில் வைக்க சொல்கிறேன் என்றார்.

"ஐ" படத்துக்கு எமிஜாக் சனை நீங்கள்தான் சிபாரிசு செய்தீர்களாமே? என்ற கேள்விக்கு "எமிஜாக் சன் லண்டனைச் சேர்ந்தவர். ஐ" படத்துக்கு அவர் தேவைப்பட்டார். அதனால் ஒப்பந்தம் செய்யப்பட்டார். நான் சிபாரிசு செய்யவில்லை" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தின மகுடி

## மாற்றத்தை ஏற்படுத்துவோமே

வாழ்க்கை என்பது லட்சியம் அதனை அடைந்து விடுங்கள் என்றார் விவேகானந்தார். இத்தகைய ஒரு வாழ்க்கையை தினமகுடி கொண்டிருக்கிறது அதன் இலட்சியம் தமிழக சஞ்சிகைளுக்கு நிகராக தன்னை வளப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதாகும். இதற்கான முயற்சிகளில் நாம் காலடி பதித்தபோது எழுந்த முதலாவது விமர்சனம் நாலு, ஐந்து இதழ் வெளிவரட்டும் பார்க்கலாம் என்பதாகும்.

சவாலான விமர்சனத்தை தந்தவர்களுக்கு வெகுமதியாக தினமகுடியின் இந்த 5ஆவது இதழை வழங்குகின்றோம். எமது ஐந்து இதழ்களுக்கும் வாசகர்களாகிய நீங்கள் வழங்கிய ஆதரவு எம்மை மகிழ்ச்சி கொள்ளச் செய்கிறது. குறிப்பாக காத்திரமான விமர்சனங்கள்,கருத்துகள். ஆலோசனைகள் உங்களிடமிருந்து தொடர்ந்து கிடைத்து வந்தமை எம்மை உற்சாகம் அடையச்செய்தன.

நம்நாட்டைப் பொறுத்தவரையில் தோல்விகண்ட துறையாக உள்ளுர் தமிழ் சஞ்சிகை வெளியீடுகள் இருக்கின்றன. எனினும் இதில் ஈடுபாடு கொண்டு

செயற்படும் ஆர்வலர்களும் நம்மத்தியில் இருக்கின்றனர். இதுமட்டுமின்றி தொடர்ந்து பல்லாண்டுகளாக வெளிவரும் சஞ்சிகைகளும் இருக்கின்றன. எனினும் மக்கள் மத்தியில் அவர்கள் விரும்பி வாங்கி படிக்கும் சஞ்சிகை என்ற தரத்தை இவைகள் பெறவில்லை என்பது கண்கூடு.

இந்த நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதில் தினமகுடி தனது முதல் கவனத்தை பதித்து செயற்படுகிறது.

எமது இந்த முயற்சிக்குப் பத்திரிக்கைதுறையூடாக முதல் ஆதரவுக்கரம் நீட்டிய தினக்குரல் வாரவெளியீட்டுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். தினக்குரலின் இந்த நடைமுறை சிறந்ததோர் முன்னுதாரணம் என்பதையும் தெரிவிக்கவும்விரும்புகிறோம். இத்துடன் எமது முயற்சிக்கு கொழுகொம்பாக நின்று துணைபுரியும் எமது விளம்பரதார்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

வாசகர்களே, தினமகுடி தனது சந்தா விபரத்தை இப்போது அறிமுகம் செய்துள்ளது எனவே உங்கள் வருடாந்த சந்தாவை பெற்றுக் கொண்டு உங்களின் இதயம் கவர்ந்த சஞ்சிகையாகத் தினமகுடி சிறக்க பூரண ஒத்துழைப்புகளை நல்குங்கள்.


**ஆசிரிய பீடம் தினமகுடி**

**இல. 238 கடற்கரை வீதி, கொழும்பு-11**

தொலை பேசி : 011 7209268

தொலைநகல் : 011 2334633

gmail: thinamakudis@gmail.com




## தினமகுடி கிடைக்கும் இடங்கள்

**R.K.Stores**
141p1,Andival Street
Colombo-11

**Sivasakathi Stores**
226\3,p, Andival Street
Colombo-11

**Poobalasingam Book Depot**
340,Sea beach Street
Colombo-11

**Sai Book Shop**
No-92,Kotahena street
Colombo-13.

**Sivasakathi Book Center**
54a mayfeiled road
Kotahena
Colombo-13

**Vailankanni Book Shop**
&music center
no-03, Ginthupitiya
Street
Colombo-13

**G.S.L.Grocery**
No-272, Messengers,
Street
Colombo-12

**Shankar Book Shop**
Wellawatta

**Vinshan Book Shop**
Wellawatta

**Saravanas Pharmacy**
Wellawatta.

**Eritto Book Shop**
Bampalapitty

**Jothi Book Shop**
Mannar

**A.Sivaruban**
11,Avenue Du Capitaine
Fonck 93150 Ie Balance
Mesnil
Parise
France

**A.Sivananthan**
8 Lambs walk
Enfield,En 2 6nh
London.

*அனைத்து மாவட்டங்களிலும் தினமகுடியைப் பெறலாம்*

**வாசகர்களே!**

**உங்கள் வாசல் கதவைத் திறக்க தினமகுடி காத்திருக்கின்றது!**

இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது என்ன? தினமகுடியில் சந்தா உறுப்பினராக இன்றே இணைந்து கொள்ளுங்கள். வருடாந்த சந்தா 1000\=ருபாவை நீங்கள் செலுத்துவதன் மூலம் தினமகுடியுடன் உங்களது உறவை உறுதிப்படுத்துங்கள். (ஆ-ர்)

# ஆறுபடை வீடான நல்லூர்

முருகன் என்றால் அழகன் என்று பெயர். நல்லூரான் என்றால் அலங்காரக் கந்தன் என்று பொருள்.

தமிழ்க் கடவுளாக தமிழர்கள் செறிந்துவாழும் வடபகுதியில் நல்லூரானாக கந்தன் குடிகொண்ட தலமே நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம். சரித்திரப் பிரசித்திபெற்ற ஆலயமாகத் திகழ்ந்துவரும் நல்லூர் இலங்கை வாழ் தமிழரின் யாழ்ப்பாண இராச்சியத்தின் பின்னணியில் பிரதான இடத்தை வகிக்கும் தனிச் சிறப்பைக் கொண்டிருக்கிறது.

763 வருடகால வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட இந்த ஆலயம் குறித்து அறிவதற்கு முதலில் ஆலயம் அமைந்திருந்த வரலாறு குறித்து பார்ப்போமே.

### முதலாவது ஆலயம்

முதலாவது ஆலயம் கி.பி.1248ஆம் ஆண்டில் சோழ மன்னனின் மந்திரியாக விளங்கிய புவனேகவாகு என்பவ ரால் குருக்கள் வளவு என்ற பெயரில் அழைக்கப்பட்டு வந்த இடத்தில் உருவாக்கப்பட்டது.

கனகசூரிய சிங்கையார் வட இலங்கையை ஆண்டவேளை தென்னிலங்கை கோட்டை இராச்சியத்தின் அரசனாக இருந்த 6ஆம் பராக்கிரமபாகு மன்னன் தனது தளபதியான சம்புமல் குமரய (செண்பகப்பெருமாள்) என்பவனை உத்தரதேசத்தை (யாழ்ப்பாண இராச்சியம்) கைப்பற்றுமாறு அனுப்பினான்.

இவனது படையெடுப்பால் யாழ்ப்பாண இராச்சியம் அழிக்கப்பட்டது. இப்படை நல்லூரிலும் புகுந்து அங்கிருந்த மாட மாளிகைகளைத் தரைமட்டமாக்கியதுடன் முதலாவது நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தையும் தகர்த்தெறிந்தது.

### இரண்டாவது ஆலயம்

கி.பி. 14501467 ஆம் ஆண்டு காலகட்டத்தில் சப்புமல்குமரய குருக்கள் வளவிலிருந்த முதலாவது நல்லூர் கோவிலை தான் அழித்தமையைக் கருத்தில் கொண்டு மீண்டும் அதனைக் கட்டியெழுப்ப ஆவல் கொண்டான்.

பண்டாரக்குளம் சங்கிலித்தோட்டப் பகுதியில் கோயிலுக்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இவ்விடத்திலேயே 2ஆவது நல்லூர்க் கந்தசுவாமி கோவில் அமைக்கப்பட்டது.

இக்கோவில் ஆகம விதிகளுக்கு அமைய கட்டுவிக்கப்பட்டது என்பதனை இதிலிருந்த செப்புத் தகடுகளில் உருவாக்கப்பட்ட விக்கிரகங்கள் எடுத்தியம்புகின்றன.

சப்புமல்குமாரயவின் ஆட்சியின் பின்னர் (கி.பி. 1478)இல் மீண்டும் ஆட்சியைப் பிடித்த கனகசூரிய சிங்கையர் அவரது மூத்த மகனான பரராசசேகரனை நல்லூர் இராஜ தானியின் அரசன் ஆக்கினான்.

பரராசசேகரன் இந்த இரண்டாவது கோவிலுக்கு அருகாமையில் ஜமுனா ஏரி என்ற தீர்த்த தலமொன்றை அமைத்து இக் கோவிலின் சிறப்புக்கு பெரும்பணியாற்றினான்.



கி.பி. 1591ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியத்தின் மீது போத்துக்கேயரின் முதல் படையெடுப்பு நடைபெற்றது. பின்னர் கி.பி.1620இல் 2ஆவது படையெடுப்பும் கி.பி.1621இல் மூன்றாவது படையெடுப்பும் நடைபெற்றது. இதன்போது யாழ்ப்பாண இராச்சியம் போத்துக்கேயர் வசமானது. கத்தோலிக்க மதத்தை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என போத்துக்கேயர் ஆட்சியாளர்கள் வலியுறுத்தினர். இதன் காரணமாக சைவ வழிபாட்டுத் தலங்கள் அழித்தொழிக்கப்பட்டன.

இதன்போது இரண்டாவது நல்லூர் கோவிலும் கி.பி. 1621 இடித்தழிக்கப்பட்டது. இந்த இடத்தில் ஓர் கத்தோலிக்கத் தேவாலயம் அமைக்கப்பட்டது. (இதனை இன்றும் காணலாம்)

### மூன்றாவது ஆலயம்

கி.பி. 1658ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியம் ஒல்லாந்தர் வசமாகியது. அவர்கள் தமது புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்புவதில் தீவிரம் காட்டினர். எனினும் கத்தோலிக்க மதம் தவிர்ந்த மற்றைய மத விடயங்களில் நெருக்கடிகளைக் கொடுக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் நல்லூரில் வாழ்ந்த சைவ மக்கள் இரண்டாவது கந்தசுவாமி கோவில் இருந்த இடத்தில் மடாலயம் ஒன்றை அமைத்து தமது வழிபாட்டினை மேற்கொண்டனர். இதுவே மூன்றாவது கோவிலாகக் கருதப்படுகிறது.

நான்காவது ஆலயம்

தொன்யுவான் மாப்பாண முதலியார் இந்தக் குருக்கள் வளவு என்ற காணியை ஒல்லாந்தரிடம் பெற்றதோடு அவரது மகன் இரகுநாத மாப்பாண முதலியார் இக்கோவிலின் புதிய நிர்மாணத்திற்கு அரும்பணியாற்றினார்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை அமைத்ததில் இரகுநாத மாப்பாண முதலியாருக்குரிய இடத்தை எவரும் மறுப்பதற்கு இல்லை.

அதேபோன்று கிருஷ்ணையர் சுப்பையர் என்ற பிராமணருக்குரிய இடத்தையும் எவரும் மறுக்கவியலாது. ஆக இவ்விருவரும் கந்தவேள் சந்நிதியை மீண்டும் அமைப்பதில் ஈடுபட்டனர். இருப்பினும் முன்னர் கோவில் இருந்த இடத்திற்கு சற்று அருகாமையில் மடாலய வடிவில் இக்கோவில் அமைக்கப்பட்டது.

ஐந்தாவது ஆலயம்

கி.பி. 1798 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியம் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் வந்தது. மக்கள் தமது சமயாசாரத்தை சுயேச்சையாகக் கைக்கொண்டனர்.

முன்னர் கோவில்போல் அல்லாது கொட்டில் போல் கிடந்த கோவில்கள் எல்லாம் புனருத்தாரனம் செய்யப்பட்டன. அவ்வேளையில் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மீண்டும் குருக்கள் வளவு என்ற பழைய இடத்திற்கு வருவதற்கு வழிகோலியது.

அக்காலவேளை நல்லூர்க் கந்தசுவாமி கோவில் கொட்டில் இருந்த இடத்தில் சில விக்கிரகங்களுடன் கோவிலாக மாற்றப்பட்டது. அர்ச்சகராக கிருஷ்ணையர் சுப்பையரின் பேரர் சுப்பையர் என்ற வாலசுப்பிரமணிய ஐயர் இருந்தார். ஆலய தர்மகத்தாவாக இரகுநாத மாப்பாண முதலியாரின் மகன் ஆறுமுக மாப்பாண முதலியார் இருந்தார். அக்காலத்தில் ஆங்கில அரசினர் சைவாலயங்களுக்கு அர்ச்சகர்களை நியமனஞ் செய்தனர்.

கந்தசுவாமி கோவில் ஆலய நிர்வாகத்தில் பிரதம அர்ச்சகர் சுப்பையருக்கும் தர்மகர்த்தா ஆறுமுக மாப்பாணருக்கும் இடையில் பிரச்சினைகள் முதல்முதலாக தலைதூக்கின. ஆலய நிதியை தனது சுய தேவைகளுக்கு ஆறுமுகமாப்பாணர் பயன்படுத்துவதாக நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று சுப்பையரால் தாக்கல் செய்யப்பட்டது. முடிவில் கந்தசுவாமி கோயிலின் சகல நடவடிக்கைகளும் பிரதம குருவும் ஆறுமுக மாப்பாண முதலியாரும் இணைந்தே நிர்வகிக்க வேண்டும். ஆலயப் பொருட்களுக்கு சேதாரம் நேரா வண்ணம் அவை ஓர் அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு அந்த அறை இரு பூட்டு களால் பூட்டப்பட வேண்டும் என்றும் அதன் சாவிகள் இருவரிடமும் இருக்க வேண்டுமெனவும் தீர்ப்பளிக்கப்பட்டது.

இத் தீர்ப்புஆறுமுக மாப்பாண முதலியாருக்குத் திருப்தியைத் தரவில்லை. கோயில் தம் குடும்ப சொத்து. அதனால் கோயில் நிர்வாகம் முழுவதும் தமக்குரியதென அவர் கருதியதால் 1809 ஆம் ஆண்டு மனுத்தாக்கல் செய்தார். இதற்கான தீர்ப்பு இரண்டு வருடங்களில் பின்னர் (அதாவது 1811 ஆம் ஆண்டு) கிடைத்தது.

அதன்படி ஆறுமுகம் மாப்பாண முதலியாரின் முன்னோர்கள் இக் கோவிலைக் கட்டுவதற்கு முக்கிய காரணகர்த்தாக்களாக இருந்தமையால் அவரே இக்கோயிலின் உரிமையாளர் என்பதனை ஏற்று கோயில் குருக்களிடமிருந்த சாவிகள் மீளப்பெறப்பட்டு ஆறுமுகம் மாப்பாண முதலியாரிடம் கையளிக்கப்பட்டது. இதன் மூலம் மாப்பாணர் குடும்பத்தினர் ஆலயத்தில் ஏகபோக உரிமை பெற்றனர்.

ஆறாவது கோவில்

ஆறுமுக மாப்பணார் காலத்திற்குப் பின்னர் அவர் வழிவந்த கந்தையா மாப்பாணர் காலத்தில் (கி.பி. 1873) ஆறுமுக நாவலர் இக்கோவிலை கருங்கற்களால் கட்ட விரும்பினார். இந்தியாவிலிருந்து விக்கிரகங்கள் தருவிக்கப்பட்டன. கோவில் விசாலப்படுத்தப்பட்டு அமைக்கப்பட்டது.

இந்த ஆறு இடமாற்றங்களும் கந்தனின் ஆறுபடை வீடுகளின் பெருமையை எடுத்தியம்புகின்றனவாக இருக்கின்றன. தமிழ் மக்களின் வரலாற்றுப் பின்னணியோடு பின்னிப்பிணைந்துள்ள கோவிலாகவும் யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றுப்பெருமையை எடுத்தியம்பும் கோவிலாகவும் நல்லூர் விளங்குகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# கிணற்றைக் காணோம்

குரு அரவிந்தன் (கனடா)

நண்பன் பதட்டத்தோடு ஓடிவந்து சொன்னபோது நான் நம்பவில்லை. இராணுவம் ஆக்கிரமித்த மண்ணில் மரணம் எப்படிச் சாதாரண நிகழ்வாய்ப் போய்விட்டதோ அதேபோல கற்பைத் தொலைப்பதுகூட ஒரு சாதாரண நிகழ்வாயப் போய்விடுமோ என்ற அச்சத்தோடு மக்கள் வாழும் மண்ணில் உறவுகளை நினைத்து ஏங்கும் நிலையில் நண்பன் ஓடி வந்து இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடுவான் என்று நான் நினைக்கவில்லை.

திடீரென நண்பன் தனது ஊருக்குப் போவதாகவும் என்னையும் தன்னுடன் துணைக்கு வரும்படி வருந்தி வேண்டிக் கொண்டதால்தான் நானும் அவனுடன் இங்கே வந்தேன். நண்பனின் வீடுவளவைப் பார்ப்பதற்கு என்று எவ்வளவோ கஷ்டப்பட்டு இராணுவத்திடம் உத்தரவு வாங்கிக் கொண்டு வந்த எங்களுக்கு வீட்டின் முன் சுவரைப் பார்த்ததுமே அதிர்ச்சியாக இருந்தது. துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு எது வரினும் அசைய மாட்டேன் என்பது போல வீட்டின் முன் சுவர் நிமிர்ந்து நின்று கொண்டிருந்தது. சில வருடங்களாகக் கவனிப்பாரற்றுக் கிடந்ததால் வளவெல்லாம் செடி கொடிகள் வளர்ந்து புதர் மண்டிக் கிடந்தது. பாம்பு பூச்சிகள்கூட அங்கே குடி கொண்டிருக்கலாம் என்ற பயம் எங்களுக்குள் இருந்தது.

எதற்கும் நல்லது என்று நான் முன் எச்சரிக்கையாக வாசலி-லேயே நின்று கொண்டேன். நண்பன் மட்டும் ஆர்வம் காரணமாக தனித்து உள்ளே சென்றான். வாசலில் நின்றபடி உள்ளே எட்டிப் பார்த்தேன். ஷெல்விழுந்த கூரை ஆங்காங்கே உடைந்து போயிருந்ததால் பெரிதும் சிறிதுமாய் சூரியக் குஞ்சுகள் கேட்பாரற்று சுதந்திரமாய் அறைகளுக்குள் விளையாடிக் கொண்டிருந்தன. யார் இந்தப் புதிய விருந்தினர் என்று ஓணான் ஒன்று உடைந்துபோன கண்ணாடி யன்னலுக்கால் என்னை எட்டி எட்டிப் பார்த்து தலை ஆட்டிவிட்டு வயதுவந்த பருவப் பெண்போல வெட்கப்பட்டுத் தலை சாய்த்துக் கொண்டது.

கொல்லைப் பக்கம் சென்ற நண்பனை இன்னும் காணவில்லையே என்று நான் தேடிப்பார்க்க முனைந்தபோது அவன் என்னை நோக்கி வேகமாக ஓடி வந்தான்.

வியர்க்க விறுவிறுக்க ஓடி வந்த வேகத்தில் மூச்சிரைத்தது. பேய் பிசாசுகளுக்கெல்லாம் நண்பன் பயந்தவனல்ல ஏதாவது பிணத்தையோ மண்டை ஓட்டையோ அல்லது மனித எலும்புக் கூட்டையோ கண்டிருக்கலாம் அதுதான் பயந்துபோய் ஓடி வருகிறான் என்று நினைத்தேன். அந்த மண்ணிலே இதெல்லாம் ஒரு சாதாரண அடிக்கடி நிகழும் நிகழ்வாய் இப்போது இது இருந்தாலும் நண்பனுக்குப் புதிதாக இருந்திருக்கலாம்.

'என்ன, என்ன..? என்று அவனை ஆசுவாசப் படுத்தினேன்.

'எல்லா இடமும் தேடிப் பார்த்திட்டேன் காணவில்லை' என்றான்.

பேயறைந்தது போல என்று சொல்வார்களே அது போல அவனது முகம் உணர்ச்சிற்று வெளிறிப் போயிருந்தது. அதற்குக் காரணமிருந்தது. எதுவெல்லாம் தொலைந்து போகாது என்ற நம்பிக்கையோடு அவன் அசட்டையாக இருந்தானோ அதெல்லாம் தொலைந்து போனதில் அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. தொலைந்து போனது ஒன்றும் சாதாரண பொருள் அல்ல, அவர்களது வீட்டுப் பாவனைக்காக பின் வளவில் தோண்டப்பட்டிருந்த நன்னீர்க் கிணறுதான்!

'உண்மையாவா கவனமாய் பார்த்தியா? நம்பமுடியாமல் மீண்டும் கேட்டேன்.

'ஆமா, நான் இப்ப தேடிப் பார்த்திட்டுத்தான் வர்றேன் காணோம்!'

'அங்கே பின் பக்கத்தில் அடி வளவெல்லாம் தேடிப் பார்த்தியா?

'பார்த்திட்டேன் அங்கேயில்லை!'

'எல்லா இடமும் பார்த்திட்டேன் அங்கே இல்லை இல்லை இல்லை!'

நான் நம்பவேமாட்டேன் என்று பிடிவாதம் பிடிப்பதாகவோ அல்லது தன்னைப் பயித்தியமாக்குகின்றேன் என்றோ அவன் நினைத்திருக்கலாம் அதனால் தான் அவன் திருப்பித் திருப்பி 'கிணறு அங்கே இல்லை' என்று உறுதியாக மறுத்துச் சொன்னான்.

ஒரு கிணறு தொலைந்து போவது என்பது யாழ்ப்பாணத்தில் சாதாரண விடயமல்ல. நதியோ, ஆறோ அந்த மண்ணை வளம் படுத்தவில்லை. மழையைத் தவிர வேறு எந்த விதத்திலும் நன்னீர் கிடைப்பது அரிதாகையால் குடி நீருக்காக அந்தக் கிணற்று நீரை நம்பித்தான் அனேக மான குடும்பங்கள் இருந்தன. மனிதர்கள் மட்டுமல்ல கால் நடைகள் பயிர்கள் செடிகள் மரங்கள் என்று அந்தக் கிணற் றின் இழப்பை நிவர்த்தி செய்வதென்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல.



யாழ்ப்பாணத்தில் சில விடயங்கள் தேசவழமைச் சட்டத்திற்கேற்ப நடைமுறைப் படுத்தப்பட்டன. ஒரு பெரிய வளவுக்குள் இரண்டு மூன்று வீடுகள் கட்டப்படும்போது ஒரு கிணறுதான் பொதுவாக இருந்தால் அந்தக் கிணறு இரண்டு மூன்று வீடுகளுக்கும் சொந்தமாகும் முறை நடைமுறையில் இருந்தது. பங்குக் கிணறு என்று இதைச் சொல்லுவார்கள்.

நண்பன் சொன்னது உண்மைதானா என்று நானும் அவனுடன் கொல்லைப்பக்கம் சென்று கிணற்றைத் தேடிப் பார்த்தேன். ஏதாவது காரணம் கருதி இராணுவமே புல்டோசரால் மண் அள்ளிக் கொட்டிக் கிணற்றை நிரப்பி மூடியிருக்கலாம்..

அடி வளவில் இருந்து பார்க்கும்போதே அடுத்த வீட்டு வாழைமரங்கள் எல்லாம் செழிப்பாக நிமிர்ந்து நிற்பது தெரிந்தது. நிச்சயமாக அங்கே யாரோ மீளக் குடி வந்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு நண்பனிடம் விசாரித்தேன். நண்பன் ஒரு வேண்டாத வார்த்தை சொல்லி அவர்களைத் திட்டினான்.

'ஏன்டா அப்படித் திட்டுறாய்? என்றேன்.

'ஆக்கரமிப்பு இராணுவத்தோடு சேர்ந்து எங்களைக் காட்டிக் கொடுக்கிறது இவங்களைப் போன்ற அயோக்கியர்கள் தான். அவங்க சக வாசமே வேண்டாம் என்றுதானே நாங்க வீடு வாசலை விட்டுக் கிளம்பிப்போனோம். என்று தனது மனசுக் குள் புகைந்து கொண்டிருந்த உள்ளக் கிடக்கையைக் கொட்டித் தீர்த்தான். பக்கத்து வீட்டுக்காரனைப் பற்றி நல்ல அபிப்பிராயம் தான் வைத்திருக்கிறான் என்று நினைத்துக் கொண்டேன். எப்படி கணவன் மனைவிக்கு இடையில் புரிந்துணர்வு இல்லாவிட்டால் வாழ்க்கையில் நிம்மதி இல்லாமல் போய்விடுகிறதோ, அதேபோலத்தான் அயலவர்கள் சரியாக அமையவில்லை என்றாலும் நிம்மதியைப் பறித்துவிடும். ஒருவேளை இவர்களுக் குள் வேலிச்சண்டை ஏதாவது இருந்திருக்குமோ?

யோசனையோடு எல்லையில் இருந்த கிடுகு வேலியில் கால் வைத்து ஏறி அடுத்த வளவை எட்டிப் பார்த்தேன். வேலிக்கு அப்பால் அங்கேயும் ஒரு கிணறு இருந்தது.

'இங்கேயும் ஒரு கிணறிருக்கே' என்றேன்.

நண்பன் ஆச்சரியமாய் என்னைப் பார்த்தான்.

'கிணறா..? அவங்க வீட்டில கிணறில்லையே' என்றபடி அவனும் எட்டிப் பார்த்தான்.

தொலைந்து போன கிணறு அடுத்த வளவிற்குள் பத்திரமாய் இருந்தது.

எப்படி கிணறு அங்கே போயிற்று? நான் ஆச்சரியமாய் அவனைப் பார்த்தேன்.

'பாவி எத்தனை வருடமாய் சாண் சாணாய், நகர்த்திய எல்லை வேலியை நாங்கள் இல்லை என்ற துணிவில் ஒரே நாளில் இந்தப் பக்கம் கொண்டு வந்து போட்டுவிட்டானே. போட்டதுதான் போட்டான் எங்க கிணற்றையுமல்லவா அந்தப் பக்கம் கவர்ந்து விட்டான். கண்முன்னாலே பகற் கொள்ளையடிக்கும் இவனெல்லாம் உருப்படுவானா? இவனைப் போன்றவர்கள் இருந்தால் எங்க மண் உருப்படுமா? என்று ஆத்திரம் தீரத் திட்டித் தீர்த்தான் நண்பன்.



தொலைந்துபோன கிணற்றைக் கண்டு பிடித்துக் கொடுத்த சந்தோஷத்தில் நான் மிதந்தாலும் கிணற்றைத் திட்டமிட்டுக் கொள்ளையடித்த அடுத்த வீட்டுக்காரனின் சாமர்த்தியத்தை நினைக்க வியப்பாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தடைக்கற்களை தகர்ப்போம் வாரீர்!

தலைநகரில் வாழும் தமிழ் மக்கள் மட்டுமின்றி சிங்கள, முஸ்லிம் மக்களில் பலரும் வறுமை கோட்டுக்குக் கீழேயே வாழ்கின்றனர்.

தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவு இவர்களது பிள் ளைகளின் கல்வியில் பாரிய பின்ன டைவை ஏற்படுத்தியிருக்கின்றது. இதன் காரணமாகப் பாடசாலைக் கல் வியை பலர் இழக்கும் நிலைமை- களைப் பார்க்க முடிகிறது.

இந்த நிலை தொடர் வது கல்வி

தலைநகரைப் பொறு த்த வரையில் இங்கு வாழும் மக்கள் தமது வாழ்கை மேம்பாட்டுக் காக பல்வேறு அரசியல் கட்சிகளுக்குத் தமது ஆதரவினை வழங்கி வந்துள்ளனர். தேர்தல் காலங்களில் மட்டும் வரும் இவர்கள் பல் வேறு வாக்குறுதி- களை வழங்கி இந்த

அறிவுள்ள பிரஜை கள் வாழும் நாடு இலங்கை என்ற நிலையை நம்நாடு எட்டுவதற்கு தடைக் கற்களாக அமைந்து விடும். இதனைக் கருத்தில் கொண்டே நவோ தய அமைப்புகள் திட்டமிட்ட பல பணி களை முன்னெடுத்து வருகின்றன.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் மேற் படி அமைப்புகளின் தலைவர் எஸ். கே.கிருஷ்ணா.

கொழும்பின் பல்வேறு பகுதிக- ளிலும் நவோதயம் அமைப்புகள் நடத் திவரும் மக்கள் சந்திப்புகளின்போது இந்தக் கருத்தினை அவர் வலியு றுத்தி வருகிறார். இதுமட்டுமின்றி இவ்வாறு வறுமைக் கோட்டுக்கு உட் பட்ட மக்களின் குழந்தைகள் எதுவித தங்கு தடையுமின்றி தமது கல்வி யைத் தொடருவதற்கு தேவையான உதவிகளையும் இவர் வழங்கி வரு கின்றார்.

மக்களுடைய வாக்குகளைப் பெற்று சென்று விடுகின்றனர் பின்னர் அவர் களை மறு தேர்தல் ஒன்றின் போதே பார்க்க முடிகிறது.

இந்நியையில், இத்தகைய மக்களது தேவைகளை அறிந்து அவர்களுக்கு உதவி செய்வதற்கு யாருமற்ற நிலை யில் நவோதயம் இளைஞர் அமைப்பு தோற்றம் பெற்றது. கடந்த ஐந்து ஆண்டுகளாக இந்தப்பணியை கட்டம் கட்டமாகத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

கடந்த 28ஆம் திகதி 6 ஆவது ஆண்டுக்குள் கால்பதித்துள்ள இந்த அமைப்பு, தற்போது நவோதயம் மக் கள் முன்னணியாக மக்களின் ஏகோ பித்த வரவேற்புடன் உதயம் கண்டுள் ளது.

நவோதயம் அமைப்பு தொடங் கப்பட்ட நாட்களிலேயே அதனை அரசியல் கட்சியாக செயற்பட வைக்க வேண்டும் என நவோதயம் இளைஞர் அமைப்பின் நிர்வாகம் தீர் மானங்களை எடுத்திருந்து போதும், சமூகசேவையே தனது விருப்பு என்பதற்கு அமைய எஸ்.கே.கிரு ஷ்ணா பல்வேறு உதவித் திட்டங் களை அறிமுகம் செய்து நடத்தி வந் தார்.

தற்போதைய நிலையில் மக்களுக் குத் தேவையான அடிப்படை வசதி- களை, தேவைகளை செய்வதாயின் அரசியல்பலம் அவசியம் தேவை என் பதை உணர்ந்து நவோதயம் மக்கள் முன்னணி உதயம் கண்டுள்ளது. இந்த அரசியல் அமைப்பை வளத் தெடுக்க வேண்டிய பொறுப்பு வறுமை கோட்டுக்கு கீழ் வாழும் மக்களுடை யதே என்பதை இவ்வேளையில் நினைவூட்ட விரும்புகிறோம்.

**ஓரணி சேருவீர் !**
**வளமோடு வாழுவீர்!**






# உலகின் மூத்த மொழி தமிழ்?

**பிலேடியன் (Pleaidians) என்னும் அயல்கிரக வாசிகள் உலகத்தோடு பல காலமாக தொடர்பில் உள்ளனர் என்று அமெரிக்கர்கள் சிலர் நம்பு கின்றனர். இவர்கள் நேரடியாக இந்தப் பிலேடியன் என்னும் வேற்றுலக வாசிகளோடு தொடர்பில் உள்ளவர்கள் என்று அறிவித்துள்ளனர்.**

உலகில் உள்ள பல விஞ்ஞான முன்னேற்றங்களுக்கு இந்த அயல் கிரக வாசி கள் தான் காரணம் என்று இந்தக் குழு நம்புகின்றது. மொழி, வரலாறு ஆகிய வற்றை உலகிற்கு அறியப்படுத்தியது இந்த பிலேடியன்கள் தான் என்று உறுதியாகக் கூறுகின்றனர் இந்த அமெரிக்கர்கள்.

மேலும் உலகில் ஏற்படும் பல்வேறு மாற்றங்களுக்கும் இந்த அயல் கிரக வாசிகள் தான் காரணம் என்று சொல்கின்றனர். உலகில் உள்ள சிக்கல்களுக்கு தீர் வும் இந்தப் பிலேடியன்கள் சொல்கிறார்கள் என்று இந்த அமெரிக்கக் குழு சொல்கிறது. இந்த குழுவில் உள்ளவர்கள் நூல்கள் படிப் தில்லை. ஆனால் பி- லேடியன்கள் உதவியுடன் பல தக வல்கள் அறியத் தந்துள்ளனர். பல் வேறு சிக்கல் களுக்குத் தீர்வு வழங்கி உள்ள னர். இவர்கள் அயல்கிரக வாசிகளோடு தொடர்பு கொண்டு ஏராளமான தகவல்களை உலகிற்குச் சொல்லி வருகின்றனர்.



அந்த வகையில் 1995 ஆம் ஆண்டு இந்த ப்லேடியன்களோடு தொடர்பு உள்ள பேராசிரியர் அலெக்சு காலியர் தனது குழுவிற்கு பாடம் நடத்துகையில் உலகின் மொழி- களைப் பற்றி பாடம் நடத்தியிருக்கிறார். அப்போது அவர் உலகின் முதலில் பேசப்பட்ட மொழி தமிழ் மொழி எனக் கூறியுள்ளார். பின்பு தான் பிலேடியன்கள் உதவியுடன் பல மொழிகள் பல்வேறு நாடுகளுக்குப் பரப்பட்டது என்று பிலேடியன்கள் சொல்வதாக இவர் சொல்கிறார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழே இந்தியாவின் மூத்த மொழி என்பதோடு மட்டுமல்லாமல், உலக மொழிகளுக்கே தாய்மொழி என்ற அளவுக்குத் தகுதிபடைத்திருக்கிறது என்பது பல அறிஞர் பெருமக்களின் நடுநிலையான முடிவாகும்.

"உலக மொழிகளில் மூத்த முதல்மொழி தமிழாகத்தான் இருக்க வேண்டும்" என்று ஆகக் கடைசியாக மொழியியல் அறிஞர் நோவாம் சோம்சுகி (Noam Chomsky) அறிவித்துள்ளார்.

நோவாம் சோம்சுகியின் கருத்தை அவருக்கு முன்னாலேயே மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர் உறுதிபட நிறுவியுள்ளார். அவருடைய அயராத மொழியியல் ஆய்வின் பயனாக அவர் கண்டுசொன்ன அரிய உண்மைகள் பற்பல. அவற்றில் ஒன்றுதான் தமிழே உலகின் மூத்தமொழி என்பது.

இதனை நிறுவும் வகையில் அவர் கொடுத்திருக்கும் ஆய்வின் அடிப்படையிலான சில ஆதாரங்களின் பட்டியலை இதோ:-

1. மாந்தன் பிறந்தகமாகிய குமரிக்கண்டத்தில் தமிழ் தோன்றி இருத்தல்.

2. இப்போது இருக்கும் மொழிகளுள் தமிழ் மிகப் பழைமையானதாக இருத்தல்.

3. தமிழ் எளிய ஒலிகளைக் கொண்டிருத்தல்.

4. தமிழில் சிறப்புப் பொருள்தரும் சொற்கள் பிறமொழிக-ளில் பொதுப்பொருள் தருதல், எ.கா: செப்பு(தெலுங்கு), தா (இலத்தின்)

5. தமிழ் இயற்கையான சொல்வளர்ச்சி கொண்டதாக இருத்தல். (செயற்கையான சொல்வளர்ச்சி இல்லை)

6. ஆரிய சேமியமொழிச் சொற்கள் பலவற்றின் வேரைத் தமிழ் தன்னகத்தே கொண்டிருத்தல்.

7. பல மொழிகளின் மூவிடப் பதிற்பெயர்கள் தமிழ்ப் பெயர்களைப் பெரிதும் சிறுதும் ஒத்திருத்தல்.

8. தாய் தந்தையரைக் குறிக்கும் தமிழ் முறைப்பெயர்கள், ஏறத்தாழ எல்லா மொழிகளிலும் திரிந்தும் திரியாதும் வழங்கி வருதல்.

9. தமிழ்ச்சொற்கள் வழங்காப் பெருமொழி உலகத்தில் இல்லாமை.

10. ஒரு தனிமொழிக்குரிய தோற்ற வளர்ச்சி முறைகளைத் தமிழே தெரிவித்தல்.

11. சில பல இலக்கண நெறிமுறைகள் தமிழுக்கும் பிற மொழிகளுக்கும் பொதுவாக இருத்தல்.

12.பல மொழிகள் தமிழிலுள்ள ஒருபொருட் பலசொற்களுள் ஒவ்வொன்றைத் தெரிந்துகொண்டிருத்தல், எ.கா: இல் (தெலுங்கு), மனை (கன்னடம்), அகம் (கிரேக்கம்), குடி (பின்னியம்)

13. பிறமொழிகளுக்குச் சிறப்பாகக் கூறப்படும் இயல்களில் மூல நிலைகள் தமிழில் இருத்தல், எ.கா: ஆரிய மொழிகளின் அசை அழுத்தமும் சிந்திய மொழிகளின் உயிரிசைவு மாற்றமும் அமெரிக்க மொழிகளின் பல்தொகை நிலையும் போன்றன,

இப்படியான, பல்வேறு உறுதியான காரனங்களின் அடிப்படையில்.. உலகத்திற்கே மூத்தமொழி.. முதல்மொழி தமிழாகத்தான் இருக்க முடியும் என்பது அறிஞர்களின் தெளிவும் முடிபும் ஆகும்.






உன் அன்பு மழையால் என் மனதின் பள்ளங்களை நிரப்பினாய், என்னை முதன்முதலில் உரிமையுடன் அழைத்தது உன் குரல்தான். எதிர்பார்க்கத் தெரியாத, எதிர்பார்ப்புகள் இல்லாத அன்பை உடையவளே, என்ன தவம் செய்தேன் உன் தோழியாவதற்கும்" என்று நட்பைக் கொண்டாடும் "நண்பர்கள் தினம்" (Friendship Day First Sunday in August) வருவதும் இந்த மாதத்தில்தான்.

என்னை நீங்களாகவும், பார்க்கும் உங்களுக்காக மட்டும் என்னையும் மாற்றிக் கொள்வேன் என்று உயிருக்குள் ஊடுருவி, உதிரமாகவும் உயிராகவும் இருக்கும் மகன் மற்றும் மகள்களைக் கொண்டாடும் தினமான "Son and Daughters Day" வருவதும் இந்த ஓகஸ்ட் மாதத்தில் தான்

1945இல் இரண்டாவது உலக யுத்தத்தில் அமெரிக்கா அணு ஆயுதத்தைப் பயன்படுத்தியது ஓகஸ்ட் 6, 9 ஆம் திகதிகளாகும் உலக வரலாற்றில் அணுகுண்டு இரண்டு முறை போருக்கு உபயோகப படுத்தப்பட்டுள்ளது. 2ஆம் உலகப்போரின் இறுதிக்கட்டத்தில் அமெரிக்கா தன்னை தாக்கிய ஜப்பானை தாக்கியழிக்க இரண்டு அணுகுணடுகளைப் பயன்படுத்தியது.

1947 ஆகஸ்ட் 15ஆம் திகதி உலகம் உறங்கிய நள்ளிரவில் மகாத்மாகாந்தி இந்தியாவில் இருந்து ஆங்கில ஆட்சியை அகற்றிய நாளாகவும் இந்தியப் பிரதமர் டில்லி செங்கோட்டையில் தேசிய கொடி ஏற்றி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்

1977 -ஆகஸ்ட் 15 ஆம் திகதி இலங்கையில் தமிழருக்கெதிரான வன்செயல் கொழும்பிலும் பிற நகரங்களிலும் இடம்பெற்று 400இற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டு 10,000 பேர் வரை காயமடைந்தனர்.

1991 ஆகஸ்ட் 15ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் ஜூலை 10 இல் ஆரம்பித்த ஆனையிறவு இராணுவ முகாமின் மீதான தாக்குதல் முடிவுக்கு வந்தது. இச்சமரில் 604 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர். எனினும் 2000ஆம் ஆண்டில் மீளத் தாக்குதல் மேற்கொண்டு தளத்தைக் கைப்பற்றினர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் M.S



தமிழ் சினிமாவில் மிகப்பெரிய இசையமைப்பாளராக கோலோச்சியவர் மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதன். 500 படங்களுக்கு மேல் இசையமைப்பாளராக பணியாற்றிய இவர் பல ஆண்டுகளாக இசையமைக்காமல் இருந்தார்.

இந்நிலையில், தற்போது சுவடுகள் என்ற புதிய படத்தில் மீண்டும் தனது இசையமைப்பாளர் பயணத்தை தொடர்ந்துள்ளார்.

வாழ்வில் மறக்க முடியாத கசப்பான காதல் நினைவலைகள் ஒரு மனிதனை உலகமே வியக்குமளவிற்கு எப்படி மாற்றுகிறது என எடுத்துரைக்கும் மாறுபட்ட காதல் கதை தான் சுவடுகள்.

இப்படத்தை அமெரிக்க திரைப்படக் கல்லூரியில் பயின்று தங்கப்பதக்கம் வென்ற ஜெ. பாலா என்பவர் கதை, திரைக்கதை எழுதி நடித்து,இயக்கி, தயாரித்தும் வருகிறார்.

இப்படத்தில் நாயகியாக மோனிகாவும் சரண்யா, ராஜே... கே.ஆர். விஜயா உட்பட பலரும் நடிக்கின்றனர்.

# இது இவர் பழக்கமா?,



எந்த நடிகைக்கும் இல்லாத ஒரு பழக்கம் இருக்கிறது ஹன்சிகா மோத்வானிக்கு. Hansika அது நல்லப்பழக்கமா, கெட்டப்பழக்கமா என்பதை அவரை வைத்து படமெடுப்பவர்கள்தான் சொல்ல வேண்டும்.

அதென்ன என்கிறீர்களா?

மும்பைக்கே தேடி வந்து தனக்கு கதை சொல்லிவிட்டு போகும் இயக்குனர்கள் பற்றிய விசாரணைதான் அது. கதை பிடித்துப்போய் அப்படத்தில் நடிக்க வேண்டும் என்று முடி வெடுத்தவுடன் சென்னைக்கு போன் அடித்துவிடுகி றார். தனக்கு நெருக்கமான பத்திரிகையாளர்கள் சிலரி டம்"அவரு கேரக்டர் எப்படி,தைரியமா சைன் பண்ணலாமா?" என்கிறார்.

இங்கிருந்து போகிற குட் ஆர் பேட் கமெண்ட்ஸ்தான் அவரது முடிவை தீர்மானிக்கிறது. இப்படியெல்லாம் தங்களை பற்றி விசாரிக்கிறார் என்பதை அறிந்த சில இயக்குனர்கள் கொந்தளிக்கிறார்கள் மனசுக்குள். இதுபற்றியெல்லாம் கவலைப்படாமல் தன் ரோசாப் பூ மனசை பிஸ்லரி வாட்டர் ஊற்றியே வளர்க்கிறாரு ஹன்சிகா!






**கேள்வி: பாம்பாட்டியரே சிறுவர் துஷ்பிரயோகம் இப்போ அதிகரித்துச் செல்கிறதே காரணம் என்ன?**

**சைனிகா -வவுனியா.**

**பதில்:** தட்டிக்கேட்க யாருமில்லை என்றால் தம்பி சண்டபிரசண்டம் என்ற பழமொழியை நிரூபிக்கும் முயற்சியாக்கும்

**கேள்வி: பாம்பாட்டியாரே நமது அரசாங்கம் அதிகமாக முற்போக்கை விரும்புகிறதா? இல்லை பிற்போக்கை விரும்புகிறதா?**

**ரவிசங்கர் -கிளிநொச்சி.**

**பதில்** இரண்டையும் விட பொறம்போக்கை விரும்புகிறது.

**கேள்வி: நம்ம நன்பன் ஒருவன் லோன்றியில போய் பாலிருக்காக என்று கேட்டிருக்கான் அவனை என்ன பண்ணலாம்?**

**ராஜா - கொச்சிக்கடை.**

**பதில்** வெளுத்தது எல்லாம் பாலுன்னு நினைச்சிருப்பார் பாவம்.. கொஞ்சம் சொல்லிக் கொடுங்க

**கேள்வி கிழக்கு மாகாணத் தேர்தல் குறித்து என்ன சொல்ல விருப்புகிறீர்?**

**அருணன்- மட்டக்களப்பு.**

**பதில்** சிறுபான்மையினக் கட்சிகளை சின்னபின்னமாக்க அரசாங்கம் எடுத்த சிறந்த முயற்சி இது.

**கேள்வி ஐயா உம்மிடம் ஒரு கேள்வி சரியா பதில் சொல்லாவிட்டால் உமது தலை வெடிக்கும் சரியா..... யாழில் நடக்கும் போராட்டங்களில் புலிக்கொடியோடு பவணிவருபவர்கள் யார்?**

**இராமநாதன்- கரவெட்டி.**

**பதில்** தலைவெடித்தாலும் பறவாயில்லை பதில் சொல்லமாட்டேன் ஏணென்னா இதற்கான பதில் புலனுக்கு எட்டதா ஆய்வுக்குரிய ஒன்று

**கேள்வி: பாம்பாட்டியாரே இந்தக் கலைஞர் கருணாநிதி சும்மாவே இருக்கமாட்டாரா?**

**பாலச்சந்தர் -வத்தளை.**

**பதில்:** பார்க்கிறதுக்கு கேனயங்க இருந்தாக்க கருணாநிதியும் சர் கஸ் காட்டுவாரு என்கிறது தெரியாத ஒண்ணா?

**கேள்வி அன்பரே..எனது கனவுகன்னி நமிதாவை விட சிறந்த நடனஅழகி உண்டா?**

**ஒவியன் -மாதம்பிட்டி**

**பதில்**: நாகு எங்கிற மைனா கறுப்பழகி நமிதாவை கரை ஒதுக்குவதாக டிங் டாங் அடிபடுதே

**கேள்வி பாம்பாடடியாரே எனது நன்பன் காதலிக்கிற பொண்ணு என்னை பார்த்துச் சிரிக்குதே என்னவாக இருக்கும்?**

**ரவிசந்திரன்- தெஹிவளை**

**பதில்**: சிரிக்குது எங்கிறதுக்காக தப்பா கணக்கு போடாக்கூடாது ரவிசந்திரன், பெண்களின் சிரிப்பில் பல அர்த்தம் இருக்கும்

அதில் ஒன்று அந்த ஏமாந்தா ஆசாமியின் நன்பனாடா நீ என்றும் இருக்கலாம் அல்லவா?

**கேள்வி: வருடத்தில ஒரு நாள் ஆஞ்சநேயர் கடும்பா இருப்பார் அது எந்த நாள் சொல்லும் பார்க்கலாம்?**

**மாதவி -கொட்டாஞ்சேனை.**

**பதில்** பெப்பிரவரி 14.. சரியா?

**கேள்வி பாம்பாட்டியாரே மறைந்த ஹிந்தி சூப்பர்ஸ்டார் ராஜேஸ்கண்ணா பற்றி உமக்குத் தெரியுமா?**

**எம். அஸ்லாம் புத்தளம்.**

**பதில்** ஆராதனா படத்தின் மூலம் இலங்கையில் பெருவாரியான ரசிகர்களைப் பெற்றவர். ஒரு காலத்தில் அவரது சிகையலங்காரம் எம்மவரது சிகைகளையும் அலங்கரித்தது என்றால் பாருமேன்.

**சிறந்த கேள்விக்கான 500 ரூபா பணப் பரிசை பெறுபவர்**
**இராமநாதன்- கரவெட்டி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நறுக்கு நான்கு

இம்முறை ஆரம்பமாகும் நறுக்கு நான்குக்காக நவோதய மக்கள் முன்னணியின் நிர்வாகிகளை தினமகுடி செய்தியாளர்கள்பிரிவு சந்தித்தது அதன்போது பிரஸ்தாபிக்கப்பட விடயங்கள் இதோ....

**நறுக்கு 1**

நவோதய மக்கள் முன்னணி சுயேச்சைக்குழுவாக கிழக்கு மாகாண சபைக்குப் போட்டியிடுவது ஏன்?

நாடாளாவியரீதியில் வறுமை கோட்டுக்குக்கீழ் வாழும் மக்களின் மேம்பாட்டுக்காக உதயமான எமது கட்சி, கிழக்கு மாகாணத் தேர்தலூடாக அங்கு வாழும் இத்தகைய மக்களது வாழ்க்கை மேம்பாட்டுக்கு உழைப்பதை நோக்காகக் கொண்டே இங்கு போட்டியிட முன்வந்ததது

**நறுக்கு 2**

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்மக்கள் தமது ஒன்றித்த சக்தியை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தவேண்டும். இந்நிலையில் தமிழ்மக்களின் அனைத்து அரசி யல் தரப்புகளும் ஒருகுடையின் கீழ் ஒன்றிணைந்து இத்தேர்தலை சந்திக்க வேண்டும் என தமிழ் உணர்வாளர்கள் கருதும்நிலையில் உங்களது இந்த நடவடிக்கை இந்த நோக்கத்தை சிதைப்பதாக அமையவில்லையா?

அருமையான கேள்வி, கிழக்கு மாகாண சபை தேர்தல் அறிவிக்கப்பட்டதும் நீங்கள் கூறிய ஒற்றுமையை தமிழ்கட்சிகளிடம் காண முடிந்ததா? நான்கு கட்சிகளை ஒரணியாகக் கொண்ட தமிழ்தேசிய கூட்டமைப்புக்கூட வேட்பாளர் தெரிவில் தமக்குள் முரண்பட்டுக் கொண்டதே இதை என்னவென்பது?

சரி அவ்வாறு ஒருமித்த எண்ணம் எமது அரசியல் தலைமைகளுக்குள் ஏற்பட்டிருக்குமாயின் தமிழீழ மக்கள் விடுதலைப்புலிகளுடன்( பிள்ளையான் கட்சி) உடன்பாடு கண்டு தமிழர்தரப்பு ஒருமித்து இங்கு போட்டியிட்டிருக்கலாமே ஏன் அவர்கள் அரசுடன் இணைந்து போட்டியிட வேண்டும்? எனவே தமிழர் தரப்பு அரசியலில் ஒற்றுமை என்பது காதவெளிதூரம் என்பதை உணர்ந்து கொண்டதன் காரணமாகவே நாம் தனிவழியாக எமது நோக்கத்தை எட்டுவதற்கான முயற்சியில் இறங்கினோம்.

**நறுக்கு 3**

அப்படியாயின் நீங்கள் கிழக்கில் அம்பாறை மாவட்டத்தை மட்டும் தேர்ந்தெடுத்து உங்கள் சுயேச்சைக்குழுவை இங்கு மட்டும் போட்டியிட வைத்தது ஏன்?

நவோதயம் மக்கள் முன்னணியின் கொள்கை இன.மத.குல,அரசியல் பேதமற்ற இலங்கையர் என்ற உணர்வை கட்டயெழுப்புவது ஆகும். அந்த நோக்கத்தினுடாக நாம் வறுமையை ஒழித்து மக்களின் வாழ்வில் சுபீட்சத்தை உருவாக்க விரும்புகிறோம். கிழக்கைப் பொறுத்தவரையில் முவீன மக்களும் வாழுகின்ற ஒரு பிரதேசம் அம்பாறை மாவட்டமாகும். எமது கொள்கையை முன்னெடுப்பதற்கான சூழல் இங்குள்ளமையால் எமது முதல்முயற்சியாக இங்கு களம் இறங்குவது என முடிவுசெய்தோம்.

**நறுக்கு 4**

மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல் நடக்கிறது இதில் தமிழ்மக்கள் வாழும்தொகுதிகளை கொண்ட இரு மாகாணங்கள் அடங்குகின்றன அவற்றில் ஒன்று கிழக்கு மற்றயது சப்ரகமுவ மாகாணம் நீங்கள் ஏன் சப்ரகமுவவில் போட்டியிடவில்லை?

இங்கும் கூட தமிழ்மக்கள் தமது பிரதிநிதித்துவத்தை தக்கவைக்க தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிட வேண்டும் என கருத்துகள் முன்வைக்கப்பட்டன. இது தொடர்பில் பல்வேறு இழுபறிகளுக்குப்பின் இங்கு அணைத்து மலையத் தமிழ்கட்சிகளும் இணைந்து போட்டியிட முன்வந்தன. ஆளும் தரப்பில் அல்லது பிரதான எதிர்கட்சிதரப்பில் எந்தவொரு தமிழ்கட்சியும் இணைந்து போட்டியிட முன்வரவில்லை இந்த திருப்பம் ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க நடைமுறையாக எம்மால் உணரப்பட்டது

இந் நிலையில் மலையகக்கட்சிகளின் ஒற்றுமை நிலைப்பாட்டைக் கருத்தில் கொண்டு நாம் இங்கு இம்முறை போட்டியிடுவதை தவிர்தோம்.

# தினமகுடி கவிதைப் போட்டி வெற்றியாளர்கள்



**01 ஆம் இடம்**:
வை.சுபாசினி,
மன்னார்.

**02ஆம் இடம்**:
க.சரவணமுத்து,
கொழும்பு-06.

**03 ஆம் இடம்** :
ச.ஜெயபாலன்,
யாழ்ப்பாணம்.

## ஆறுதல் பரிசு பெறுபவர்கள்...

01. ஏஸ். ஒகஸ்டினா,
மட்டக்குளி,
கொழும்பு.

02. வி.சுதர்சினி
கொழும்பு-15

03. மேரி றொசேதா,
செம்பியன் பற்று
கிளிநொச்சி.

04. எம்.எம்.பாலகிருஷ்ணன்,
பேலிய கொட.

05. சகாய செமிளா,
கதிரரான வத்த.

06. எஸ்.யோகேஸ்வரி,
கொழும்பு-15

07. கே.எல்.அப்துல் றகூர்,
நிந்தாவூர்,
மட்டக்களப்பு.

08. எல்.டெவோன்
புனித அந்தோனியார்
வித்தியாலயம்-13.

09. க.ரேக்காந்தினி,
கொழும்பு-15.

10. எம்.ஜெயசித்திரா,
கொழும்பு-15.

# தினமகுடி அனுசரணையில் நவோதயம் வழங்கும் தையல் இயந்திரம்

## வெற்றியாளர்கள்

01. எ.எம்.மேரி ரிசோதா
செம்பியன்பற்று.

02. வை.காமிலா
306/ 1, 3ஆம்
குறுக்குத்தெரு
நிந்தாவூர்-05.

03. ரி.கலைச்செல்வி
இல.02, அவிசாவளை.

04. எஸ்.ரதிசர்மா
கொட்டாஞ்சேனை.

05. எம்.தீபா
மட்டக்குளி.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாளங்களை அந்தகாரப்படுத்த இடமளிக்கலாமா?







பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர்கள் இலங்கைத் தீவில் காலடி வைக்கும் வரை இலங்கையில் சிங்கள மக்களுக்குத் தனியான அரசுகளும் தமிழர்களுக்கென ஓர் அரசும் இருந்து வந்தன. அன்றைய கால வழக்கப்படி அரசர்களுக்கிடையில் எழும் முரண்பாடுகளால் இரு நாடுகளுக்கிடையே போர்களும் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், தமிழர்களும் சிங்களவர்களும் தங்களது தாயகத்தில், தங்கள் மொழி, பண்பாடு இவற்றினைத் தொடர்ந்து பேணும் நிலை இருந்து வந்துள்ளது.

போர்த்துக்கேயர்களைத் தொடர்ந்து ஒல்லாந்தரும், அவர்களின் பின் ஆங்கிலேயர்களும் இலங்கைத்தீவின் நிர்வாகத்தினைச் சுமார் நானூறு வருடங்களுக்கும் மேலாக தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த காலத்தில் தான் இரு இன அரசுகளது நிர்வாகமும் ஒன்றாக இணைக்கப்பட்டது.

எனினும், மக்கள் தொகையின் அடிப்படையில் ஆங்கிலேயர்களிடம் இருந்து சிங்களப் பெரும்பான்மையிடம் அரச நிர்வாகம் வழங்கப்பட்டது. இந்த நாளே இலங்கை சுதந்திரம் அடைந்த நாளாக உலகப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆனால், ஈழத் தமிழர்களின் சுதந்திரம் படிப்படியாகப் பறிபோவதற்கு வகை செய்யப்பட்ட நாளே அது என்பதைச் சுதந்திர இலங்கையின் அரசியல் வரலாறு கடந்த அறுபத்து மூன்று வருடங்களாய் நிரூபித்துக் கொண்டிருக்கிறது.

மனிதன் என்னும் பொதுப் பெயரில் உருவான இனம் பின்னர், பேசும் மொழியாலும், வாழும் இடத்தாலும் தனக்கென 'இன' அடையாளங்களை ஏற்படுத்திக் கொண்டு அதனைப் பாதுகாப்பதே தனது பெருமை என்னும் நிலையை அடைந்தது.

குறிப்பிட்ட மொழி பேசும் மனிதர்கள் கூடிவாழும் இடம் அவர்களது நாடாயிற்று. இந்தக் கூட்டு வாழ்க்கையே காலப் போக்கில் அவர்களுக்கு எனக் கலாசாரத்தையும், பண்பாட்டினையும் தோற்றுவித்தது. இவற்றைப் பேணுவதும், போற்றுவதும் அவர்களது தனி உரிமையாகவும், பெருமையாகவும் நிலைபெற்றது. அதனையே தமிழ் இனமும் இலங்கையில் கடைபிடித்து வந்தது.



இலங்கை சுதந்திரம் அடைந்ததும் சிங்களப் பெரும்பான்மை அரசு முதன் முதலில் கொண்டு வந்த - மலையகத் தமிழர்களைப் பாதித்த 'பிரஜா உரிமைச் சட்டம்', ஏற்கனவே சிறுபான்மை இனத்தினராக இருக்கும் தமிழர்களைக் குரல் அற்றவர்களாக் கும் முயற்சியாகவே கருதப்பட்டது.

ஓர் இனத்தை- அதன் அடையாளத்தை அழிக்க வேண்டுமாயின் அதன் மொழியையும், அவ்வினம் ஒன்றாகக் கூடி வாழும் இடத்தையும் அழித்து விட்டால் போதும் என்னும் திட்டத்தினை நாகரீகத்தில் முதிர்ச்சி அடைந்து விட்டதாகப் பேசும் சில நாடுகள் ஆங்காங்கே அரங்கேற்றி வந்தன அவ்வாறானதொரு அரங்கேற்றமே இலங்கையிலும் நிகழ்ந்தேறியது.

இச்சட்டம் நாடாளுமன்றத்தில், விவாதத்திற்கு வந்தபோது ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக்காக அடுத்து வந்த முப்பது ஆண்டுகளாகப் போராடிய 'தந்தை செல்வா' அவர்கள் "இன்று மலையகத்தவர்களை நாட்டை விட்டு விரட்டும் சிங்கள அரசு, நாளை ஈழத்தமிழர்களையும் விரட்டுவதற்கு முன்வரலாம்" எனக் கூறிய வார்த்தைகள், இன்று செயலுரும் பெற்று வருகிறன.


பி.ஜி.ஆர்

இவ்வாறானதொரு நிலையில் தமிழர்களின் தாயக மண் கபளீகரம் செய்யப்படும் துர்பாக்கியம் தொடர்ந்து கொண்டிருக்கிறது அதனை உடனே நிறுத்த வேண்டிய வரலாற்றுக் கடமை ஒவ்வொரு தமிழ் மகனிடமும் உள்ளது என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இந்த கடமையைச் செய்ய வேண்டிய முக்கிய களங்களை - தளங்களை உய்த்தறிந்து தமிழ்மக்கள் தமது கடமைகளை சரிவர செய்ய வேண்டியது அவசியமானது. இந்த உணர்வை எடுத்தியம்பும் வகையில் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நிகழும் இக்கால கட்டத்தில் தமிழ் சிவில் சமூகம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வோமாக.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிற்பிகள் இருவர்

ஆயக்கலைகள் 64 என்பார்கள் ஆம் நாம் இங்கே உங்களோடு பகிர்ந்து கொள்ள இருப்பது சிற்பக்கலையை பற்றித்தான். சிற்பங்கள் எனும் போது குறிப்பாக தமிழரின் கலை பண்பாடு மரபு நாகரீகம் என்பன வெளிப்பட்டிருக்கும். பண்டையகாலம் தொட்டு மண் மரம் கல் தந்தம் போன்றவற்றில் தமது திறமையினையும் நுட்பத்தினையும் வெளிபடுத்தியுள்ளனர்.



தினமகுடியின் தேடலில் நிலையாக ஒரு துறையில் சாதித்தவாகளின் பட்டியலில் இம்முறை மூன்று தலைமுறை கடந்து 40 வருடமாக சிற்பத்துறையில் தமக்கென தனியிடம் பிடித்திருக்கும். காயத்திரி டிரேட் சென்டர் உரிமையாளரும்.சிற்பக்கலைமணி விருது பெற்ற சிற்பக்கலைஞர் களுமான தி.சற்குருநாதன் ஆச்சாரி அவர்களும் அவரின் தம்பியான தி.இராதகிருஸ்ணன் ஆச்சாரியின் சிற்பக் கூடத்தில் தினமகுடி குழுவினர்.

**தங்களின் தலைமுறை பற்றி?**

எமது தாத்தாவின் பெயர் வடிவேல் ஆச்சாரி- குழந்தை வேல் ஆச்சாரி-தியாகராஜ ஆச்சாரி-தி.சற்குருநாதன் ஆச்சாரி- தி.இராதகிருஸ்ணன் ஆச்சாரி.நாங்கள் நான்கு சகோதரர்கள் சிற்பத்துறையில் நானும் எனது தம்பியும் தான் ஈடுபட்டிருக்கிறோம்.

**சிற்ப வேலையை செய்வதற்த் பாரம்பரிய குலமும் உரி மையும சார்ந்தவர்களாக இருக்கவேண்டுமா?**

ஆம் அது விஸ்வப்பிரம்ம குலத்தினரால் மட்டுமே செய்ய முடியும்.

40வருட இத்துறையில் தங்களின் சாதனை பற்றி-

எமது தந்தைக்கு பிறகு நானும் எனது தம்பியும் இணைந்து 20 வருடமாக இத்துறையில் ஈடுபட்டு வருகிறோம். எங்களுக்கு பெரும்பாலும் கொடிமரம் வேலைதான் அதிகமாக வரும் நாங்கள் செய்யும் சிற்பங்கள் அனைத்தும் பெரும்பாலனவை வெளிநாட்டிற்கு தான். கனடா, லண்டன் பிரான்ஸ், நோர்வே, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம். கனடா சித்திவிநாயகர் கோயிலுக்கு 7கிலோ தங்கத்தில் அங்கி அணிகலம். விம்பிள்டன் கனகதுக்கை அம்மனுக்கு 4கிலோ தங்கக்கிரீடமும் 21 அடி தங்கமுலாம் பூசிய கொடிமரமும் மற்றும் மாத்தளை கோயிலுக்கு 300 கிலோவில் வெள்ளித்தேர் செய்துள்ளோம். இவை நாங்கள் செய்தவற்றில் சில

**தங்களின் சிற்பக்கூடத்தில் உற்பத்திசெய்யப்படுபவை?**

ஆயாதி கணித தியானம் -ரூபம்-மந்திரம்முறைப்படி சிலா விக்கிரகம். தாம்பரவிக்கிரகம்.கலசம் கொடிஸ்தம்பம் வாசல்திருவாசி. விளக்குகள். சோடா உபசாரம். ஆசனதகடுகள். காண்டாமணிகள.ஸ்நபன குடங்கள் செம்புகள் யாகசாலை. தேர்-விக்கிரகஅலங்காரப்பொருட்கள். திரைச சீலைகள். அஸ்ட்டம்பாதம்.மேருமலை ஆசனக்கற்கள். வெள்ளி- தங்க- அங்கிகள். பட்டுக்குடைகள் முதலான அனைத்து ஆலயத்திற்கு தேவையான சிற்ப வேலைகளையும் செய்கிறோம்.

**சிற்பக் கலைஞனின் பார்வைக்கும் சாதரண மனிதனின் பார்வைக்கும் வித்தியாசம் உண்டல்லவா?**

ஆம் உண்மைதான் சிற்பக்கலைஞன் எனும் போது அவனது. எண்ணத்தில் பார்வையில் எந்த உருவத்தை அனுஷ்ட்டாணம் செய்கிறானோ அவ்வுருவம் கல்லிலோ செம்பிலோ வெள்ளி தங்கம் எதுவானாலும் வெளிப்படும் அக்கலையில் அவனுக்கு உள்ள ஈடுபாடு பக்தி கலை ஞானம் தாகத்தின் ஊடாக செழுமையான உருவம் சிலையாக வெளிப்படும். இதற்கு விஸ்வப்பிரம்ம குலத்தினை சார்ந்தவனாக இருந்தால் இயல்பாகவே இக்கலை வசப் படும் மகிமைதான்.

**இத்துறையினை கற்கவிரும்புவோர் பயிற்சி பெற எத்தனை ஆணடுகள் பிடிக்கும்?**

யாரும் கொண்டு போனதும் இல்லை-யாரையும் கொண்டு வந்ததும் இல்லை பொதுவாக இத்துறையினை எல்லோரும் கற்றுக்கொள்ளலாம். தற்போதுள்ள இளைஞர்களுக்கு இப்படியான துறையில் ஈடுபாடு இல்லை எனலாம். பொதுவாக சிற்ப வேலைப்பாடு எனும் போது பொறுமை நிதானம் சகிர்ப்புத்தன்மை எந்த நேரமும் வேலை செய்ய தயாரன நிலை வேண்டும். இல்லையேல் மிகவும் கடிணம் தான் அவர்களின் விருப்பமும் ஆர்வமும் தான் அந்த கால அளவைக் குறிக்கும் விஸ்வப்பிரம்ம குலத்தைச் சார்ந்தவனாக இருந்தால் மிகவும் இலகுவாகும்.

**சிற்பம் ஒன்றை உருவாக்கும் போது சிற்பக்கலைஞனின் மனநிலை எவ்வாறு காணப்படும?**

சிற்பமும் கருவில் இருக்கும் குழந்தையும் ஒன்று தான் "பிள்ளை பிறப்பதும் உண்டு செத்து பிறப்பதும் உண்டு" ஏன் என்றால் இரண்டுமே பிறந்தவுடன் தானே முழுமையான வடிவம் அழகு எமக்கு தெரியும். கருவைப் பொறுத்தவரையில் தற்போது ஆணா பெண்ணா குறை நிறைகளை தெரிந்து கொள்ளலாம். சிற்பத்தில் அவ்வாறில்லை மெழுகு கொழுத்தி ஊர்த்திவார்க்கும் போது விடிய விடிய பொறுமையாக இருந்து. நாம் நினைத்தவாறு வரும்போது மட்டுமே மனம் சந்தோஷம் அடையும்.



மூன்று ஆண்டு காலம் செய்யப்பட்ட சிற்பம்

**பஞ்சலோகம் கருங்கல் வெள்ளி செம்பு போன்றவற்றில் சிலையினை செதுக்கும் போது எது இலகுவானது என உணர்கிறீர்களா?**

மெழுகு பிடித்து செய்யும் போதுதான் தொடர்ச்சியாக செய்ய வேண்டியவை தெளிவாக மனத்திரையில் வரும் காலின் அளவு தான் அச்சிலையின் முகத்தின் அளவு ஒவ்வொன்றுக்கும் அளவுப்பிரமாணம் உண்டு முதலில் உடல் அமைப்பைதான் செய்து அதற்கேற்றால் போல்தான் தலையை அமைப் போம் .

பஞ் சலோகம(தங்கம்-வெள்ளி-செப்பு-ஈயம்-இரும்பு) எல்லாமே ஒரேமாதிரியான செயல்திறன் தான்.



இலங்கையில் இத்துறையில் உங்களுக்கு போட்டியாக யாரும் உள்ளார்களா-

இதுவரைக்கும் யாரும் இல்லை இனியும் வரமுடியாது. காரணம் சிற்ப நுட்பங்கள் அஷுஷ்ட்டாணங்கள் சமய சித்திகள் சாஸ்திர விதிமுறைகளின்படி செய்கிறோம். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சிற்பவேலைப்பாடு செய்பவர்கள் உள்ளார்கள். இலங்கையில் பெரும்பாலன ஆலயங்களில் எமது கைவண்ணத்தில் உருவான சிற்பங்கள் அழகுபடுத துகின்றன எனலாம்.

**சிற்பச்செதுக்கலின் முக்கிய நிகழ்வு எது?**

அது கண் திறப்பு தான் காலில் இருந்து தலைவரை சரியான முறையான நுனுக்கமான அளவுப்பிரமாணப்படிதான் ஒவ்வொரு சிலையும் செதுக்கப்படுகிறது. சிலையின் முழுமையான வடிவம் உருவம் பெறுவதுதான் கண் திறப்பு. கண்திறப்பு நிகழ்வில் அந்தச்சிலையை ஆரம்பித்த ஆசாரியே செய்ய வேண்டும். செய்யும் போது எல்லாவிதமான வேலைகளையும் முடித்து வைத்து மற்ற ஆசாரிகள் வெள்ளைத்துணியினால் மறைத்து பிடிக்க சமய சாஸ்திர முறையின் படி 'ஒன்பது வாசலையும்' பிரதான ஆசாரி கண்திறப்பு செய்து வைப்பார்.

**கைச்சிற்பவேலைக்கும் இயந்திர சிற்பவேலைக்கும் இடையிலான வேறுபாடு என்ன?**

இயந்திரமாகிப் போன மனித வாழ்க்கையில் எல்லாமே இலகுவானதுதான் சிற்பத்தை பொறுத்தவரையில் இயந்திரம் எனும் போது அளவு முறைகளை சரியாக குறிப்பிட்டு மிகவும் இலகுவாக செய்து விடலாம். ஆனால் கைவேலைப்பாடு எனும் போது மிகவும் பொறுமையாக நேரமெடுத்து நிதானமாக செய்ய வேண்டும் கடினம் தான் இருந்தாலும் மனதக்கு திருப்தியளிக்கிறது.

**தினமகுடி பற்றி தங்களின் கருத்து?**

இலங்கை சிறப்புக்கள் கலைஞர்களின் திறமைகளுக்கு முன்னுரிமை வழங்கி வெளியுலகுக்கு கொண்டு வரும் எண்ணம் பாராட்டுக்குரியது. இன்னும் பல புதுமையான முறை யில் தொடர்ச்சியாக வெளிவந்து சாதனை படைக்க வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

**சந்திப்பு–வை.கஜேந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலுக்கும் திருமணத்திற்கும் வித்தியாசம் என்ன?



ஒரு ஞானியை அணுகிய சீடன், காதலுக்கும் திருமணத்திற்கும் உள்ள வித்தியாசம் என்னவெனக் கேட்டான்.

அதற்கு அந்த ஞானி, "அது இருக்கட்டும். முதலில் நீ ரோஜாத் தோட்டத்துக்குப் போ. அங்கே உனக்கு எது உயரமான ரோஜாச் செடி என்று தோன்றுகிறதோ, அதை எடுத்துக் கொண்டு வா. ஆனால் ஒரு நிபந்தனை. நீ எக்காரணம் கொண்டும் போன வழியே திரும்பி வரக் கூடாது." என்றார்.

கிளம்பிய சீடன் சிறிது நேரம் கழித்து வெறும் கையுடன் வந்தான். ஞானி, "எங்கே உன்னைக் கவர்ந்த உயரமான செடி?" என்று கேட்டார்.

சீடன் சொன்னான், "குருவே, வயலில் இறங்கி நடந்த போது முதலில் உயரமான ஒரு செடி என்னைக் கவர்ந்தது.

அதை விட உயரமான செடி இருக்கக் கூடும் என்று தொடர்ந்து நடந்தேன்.

இன்னும் உயரமான ரோஜாச் செடிகள் தென்பட்டன. அவற்றை விட உயரமான செடிகள் இருக்கக் கூடுமென மேலும் நடந்தேன். அதன் பிறகு தென்பட்டதெல்லாம் குட்டையான ரோஜாச் செடிகளே. வந்த வழியே திரும்ப வரக்கூடாது என்பதால் முன்னர் பார்த்த உயரமான செடியையும் கொண்டு வர முடியாமல் போய் விட்டது."



புன்முறுவலோடு ஞானி சொன்னார், "இது தான் காதல்!".

பின்னர் ஞானி, "சரி போகட்டும், அதோ அந்த வயலில் சென்று உன் கண்ணுக்கு அழகாகத் தெரிகின்ற ஒரு சூரிய காந்திச் செடியைப் பிடுங்கி வா. ஆனால் இப்போது கூடுதலாக ஒரு நிபந்தனை. ஒரு செடியைப் பிடுங்கிய பின் வேறு ஒரு செடியைப் பிடுங்கக் கூடாது."

சிறிது நேரத்தில் சீடன் ஒரு சூரிய காந்திச் செடியுடன் வந்தான். ஞானி கேட்டார்," இது தான் அந்தத் தோட்டத்திலேயே அழகான சூரிய காந்திச் செடியா?"

சீடன் சொன்னான், "இல்லை குருவே, இதை விட அழகான செடிகள் இருக்கின்றன. ஆனால் முதல் முறை கோட்டை விட்டது போல் இந்த முறையும் விட்டு விடக் கூடாது என்ற அச்சத்தில் முகப்பிலேயே எனக்கு அழகாகத் தோன்றிய இந்த செடியைப் பிடுங்கி வந்து விட்டேன். நிபந்தனைப்படி, ஒரு செடியைப் பிடுங்கியபின் வேறு செடியைப் பிடுங்கக் கூடாது என்பதால் அதன் பிறகு இதை விட அழகான செடிகளை நான் பார்த்தபோதும் பறிக்கவில்லை".

இப்போது ஞானி சொன்னார், "இது தான் திருமணம்!".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# துன்புறுத்தலா பயிற்சியா?

லண்டன் ஒலிம்பிக்கில் பதக்கவேட்டை நடத்திய சீனாவின் ஆதிக்கத்துக்கு அந்நாட்டு மக்கள் விளையாட்டுகள் மீது வைத்துள்ள பற்றுத்தான் காரணமாக அமைந்துள்ளது.
ஏனெனில், அந்நாட்டில் குழந்தை பிறந்தவுடனேயே அதற்கு விளையாட்டுணர்வை பெற்றோர்கள் ஊட்டுகின்றனர்.
குழந்தை சிறிது வளர்ந்து சிறுவனானதும் பெற்றோர்கள் விளையாட்டைப் புகட்ட ஆரம்பித்துவிடுகிறார்கள்.
சிறுவர்கள் விரும்புகிறார்களோ இல்லையோ விளையாட்டுப் பயிற்சிகள் கட்டயப்படுத்தப்பட்டுள்ளன.
சிறுவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுவதைப் பார்த்தால் இது பயிற்சியா அல்லது சிறுவர் மீதான துன்புறுத்தலா என்றே கேட்கத் தோன்றும்.
எனினும், இதன் பயனே அந்நாடு, விளையாட்டுப் போட்டிகளில் உச்ச நிலையில் உள்ளமைக்குக் காரணமாக அமைந்துள்ளது.
சீனா ஆசிய நாடு என்ற வகையில் எமக்கும் அந்தப் பெருமை சேர்கிறது.
ஆனால், நம் நாடு அதே கண்டத்தில் உள்ளபோதும் ஒரு பதக்கத்தைப் பெறுவதற்கே முடியாத காரியமாக உள்ளமை கவலைக்குரிய விடயமே.



## THE 100m FINAL OLYMPIC STADIUM, LONDON, AUG 5 2012




| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| LANE | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 |
| Name | Churandy Martina | Ryan Bailey | Usain Bolt | Justin Gatlin | Yohan Blake | Tyson Gay | Asafa Powell | Richard Thompson |
| Country | HOL | USA | JAM | USA | JAM | USA | JAM | TRI |
| TIME | 9.94sec | 9.88 | 9.63 (OR) | 9.79 | 9.75 | 9.80 | 11.99 | 9.98 |
| POSITION | 6th | 5th | 1st | 3rd | 2nd | 4th | 8th | 7th |
| REACTION TIME | 0.139sec | 0.176sec | 0.165sec | 0.178sec | 0.179sec | 0.145sec | 0.155sec | 0.160sec |
| PERSONAL BEST | [illegible] | 9.88sec | [illegible] | [illegible] | 9.75 | 9.69 | 9.72 | 9.85 |




உலகின் அதிவேக வீரரான ஜமைக்காவின் உஸைன்போல்ட் ஒலிம்பிக் 100 மீற்றர் ஓட்டத்தில் மீண்டும் தங்கம் வென்று, தாமே வேக மனிதன் என்பதை நிரூபித்துள்ளார்.
உஸைன் போல்ட் பந்தய தூரத்தை கடக்க 9.63 விநாடிகள் மட்டுமே எடுத்து தங்கப்பதக்கத்தை தட்டிச்சென்றார். அவரைத் தொடர்ந்து பின்னால் வந்த சக நாட்டு வீரரும் பயிற்சித் தோழருமான யோகன் பிளேக் 9.75 விநாடிகளில் கடந்து வெள்ளிப்பதக்கத்தை தட்டிச்சென்றார்.
அமெரிக்காவின் ஜஸ்டின் காட்லின் 9.79 விநாடிகள் எடுத்து வெண்கலப்பதக்கத்தை வென்றார்.



# ஒலிம்பிக்கையும் விட்டுவைக்காத சூதாட்டம்!

ஒலிம்பிக் பட்மின்டனில் சீனா, தென் கொரிய வீராங்கனைகள் ஆட்ட நிர்ணய சூதாட்டத்தில் ஈடுபட்டமை விளையாட்டுலகைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.
பட்மின்டன் பெண்கள் இரட்டையர் போட்டியில் பங்கேற்ற வீராங்கனைகள் குறிப்பிட்ட லீக் போட்டிகளில் திறமை வெளிப்படுத்தாமல், வேண்டுமென்றே தோற்ற விடயம் அம்பலமாகியது.
இதில் தலா ஒரு சீனா, இந்தோனேசியா மற்றும் 2 தென் கொரிய ஜோடி என, மொத்தம் 8 வீராங்கனைகள் சிக்கினர். இவர்கள் போட்டியின் போது, வேண்டுமென்றே மோசமாக விளையாடினர்.
இப்போட்டிகள் குறித்து உலக பாட்மின்டன் கூட்டமைப்பு (பி.டபிள்யு.எப்.) தீவிர விசாரணையை நடத்தியது. இறுதியில் 8 வீராங்கனைகளும் வேண்டுமென்றே தோற்றமை நிரூபணமானதால், தொடர்ந்து போட்டிகளில் பங்கேற்க முடியாமல், ஒலிம்பிக்கிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டனர்.

தகுதி நீக்கம் செய்யப்பட்ட 4 ஜோடிகள்:
1. யு யாங்-வாங் ஜியோலி (சீனா)
2. ஜங் கியுங்-கிம் நா (தென் கொரியா)
3. ஹா யுன் ஜங்-கிம் ஜங் மின் (தென் கொரியா)
4. கிரேசியா-ஜாவுகரி (இந்தோனேசியா)



அம்மா அவசரமா ஒரு முன்னூறு ரூபா வேண்டியிருக்கு. வர்ற மாச சம்பளத்துல புடிச்சுக்குங்க."

"எதுக்கு முன்னூறு, பிடிக்கிறதுக்கு அங்க என்ன மிச்சமிருக்கு, மொத்தமா வாங்குனது, நடுவுல வாங்குனது எல்லாம் போக இந்த முன்னூறும்னா என்னத்த கைக்கு வரும்?"

கோதை மறுக்க மாட்டாள் என்ற நம்பிக்கையில் 'பளீச்' என்று கேட்டு விட்ட கமலத்துக்கு சங்கடமாய் போயிற்று.

"என்னம்மா செய்யறது? பொண்ணுக்கு வர்ற வாரம் பொறந்தநாள் வருது. புதுசு வாங்கணும்னு கண்ணக் கசக்கிட்டு நிக்கு. ஸ்கூல்ல, அக்கம்பக்கத்து சிநேகிதிங்ககிட்டல்லாம் வேற சொல்லி வச்சிருக்காம். அதென்னவோ னிக்க ஆரம்பித்தாள்.

"எல்லாம் உன் நல்லதுக்குதான் சொல்றேன், பொட்டைப் பசங்களுக்கு ரொம்ப இடம் கொடுத்து வைக்காதே. இன்னிக்கு கஷ்டந்தெரியாம அதக் கொண்டா இதக் கொண்டான்னு கேட்கிற மாதிரியேதான் கட்டிக்கிட்டுப் போனபிறகும் இருக்கும்ங்க" பின்னாடியே வந்து சமாதானம் பண்ணுகிற மாதிரி சொல்லிச் சென்றாள் கோதை.

இரண்டு நாட்கள் சென்றிருக்கும், துணிகளை ஒவ்வொன்றாக வாஷிங் மிஷினில் போட்டுக் கொண்டிருந்த கமலம், வீட்டு எஜமானரின் சட்டைப் பையில் ஏதோ தட்டுப்பட கைவிட்டுப் பார்த்தாள். மொடமொடப்பாய் இரண்டு



-ராமலக்ஷ்மி

# தாய் மனசு

சுடிதாராமே. அது வாங்கணுமாம்."

"அதுங்க அப்படித்தான் கண்ணக் கசக்கும், அடம் பண்ணும், எல்லாத்துக்கும் வளஞ்சு வளஞ்சு போனீயான ஒம்பாடுதான் திண்டாட்டம். குடும்ப நெலம புரிய வேண்டாமா? மொதல்ல எதுக்கு இப்ப புதுத் துணி, பாப்பாவோட துணியெல்லாம் அவளுக்குதானே தர்றேன். ரெண்டு மூணு தடவையே போட்டதெல்லாம் கூட புதுசு போலக் கொடுத்துருக்கேனே, அதுல ஒண்ண போட்டுக்கச் சொல்லு."

"வாஸ்தவந்தாம்மா, ஆனா புதுசு கட்டின மாதிரியாகுமா?"

"ஆமா பிசாத்து நீ முன்னூறு ருவாய்ல வாங்குற புதுச விட மூவாயிர ரூபா ட்ரெஸ்ஸை போட கசக்குதாமா ஒம் பொண்ணுக்கு?"

'தினம் தினம் மிஞ்சின பிரியாணியும் கறி சோறும் இங்கே கொட்டிக் கொடுத்தாலும் வீட்டில ஒரு வா கஞ்சி வச்சுச் சூடா உறிஞ்சுக் குடிக்கிறதுதாம்மா தேவாமிர்தம்' நினைத்ததைச் சொல்ல முடியாமல் கமலம் வேலையைக் கவ ஐநூறு ரூபாய் நோட்டுக்கள். நேராக மதிய தொலைக்காட்சித் தொடரில் மூழ்கியிருந்த கோதையின் முன் வந்து நோட்டுக்களை நீட்டினாள்.

"ஸாரோட சட்டைப் பையில இருந்துச் சும்மா, சலவைக்குக் கூடையில போடும் போதே பாத்து போடுங்கம்மா."

அசடு வழிய நோட்டுக்களை வாங்கிக் கொண்ட கோதை "நல்ல வேளையா பார்த்தே. மிஷினில் போட்டிருந்தியானா ஆயிரம் ரூவாயும் அரோகரான்னு போயிருக்கும்" என நெளிந்தாள்.

அடுத்த ஒரு மணியில் பம்பரமாய் சுழன்று அத்தனை வேலைகளையும் முடித்து விட்டு கமலம் கிளம்புகையில் கோதை அழைத்தாள்.

"இந்தா பிடி முன்னூறு ருவா, அன்னிக்குக் கேட்டியே.."

"பொண்ணுக்கு துணி வாங்கவா? வேண்டாம்மா. எனக்கு தெரிஞ்ச ஒரு வீட்ல வேலைக்காரம்மா லீவு போட்டிருச்சு. நாலஞ்சு நாள் அங்கே செய்யறதா ஒத்துட்டிருக்கேன். கணிசமா தருவாங்க. அதுல சமாளிச்சுப்பேன்."

"அன்னிக்கு எடக்கு முடக்கா ஏதோ சொல்லிட்டேன்னு ராணியம்மாக்குக் கோவமோ?"

"ஐயோ அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல. ஆனாப் பாருங்க, இந்த வெள்ளி வந்தா பொண்ணுக்கு பன்னெண்டு முடியுது.

அறியா வயசு. ஒரு நா அதுக்குப் புரியும் என் சிரமம். நாமளும் இதெல்லாம் தாண்டி வந்தவங்கதானே. அடம் வளரும்னு நீங்க பாக்கறீங்க. அது கண்ணுல தண்ணி வரப் படாதுன்னு இந்த தாய் மனசு பாக்குது. ஏழைப்பட்டவங்களுக்கு நாளு, கெழமை, பண்டிகை எதுவும் வராமப் போனா நல்லாருக்கும். ஆனா வருதே.

போகுது விடுங்க. நாலுநாளு கூடுதலா கஷ்டப்பட்டது, எம்புள்ள கண்ணு மலர்ந்து சிரிக்கயில மறஞ்சு போகும். நீங்க சொன்னாப்ல மாசம் பிறந்தா கைக்கு வர கொஞ்சங் காசாவது உங்க பக்கம் நிக்கட்டும், வரேம்மா."

'கடனா இல்லே, அன்பளிப்பாதான் கொடுக்க வந்தேன்' சொல்லும் திராணி அற்று நின்றிருந்தாள் கோதை. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவாஜி குடும்பத்திலிருந்து

பிரபுவின் மகன் விக்ரம் பிரபு அறிமுகமாகும் படம் கும்கி. மைனா வின் வெற்றி இயக்குனர் பிரபு சாலமன் இந்தப் படத்தை இயக்கி வருகிறார். விக்ரம் பிரபுவுக்கு ஜோடியாக மலை யாள நடிகை லட்சுமி மேனன் நடிக் கிறார். தம்பி ராமையா முக்கிய வேடம் ஏற்றுள்ளார்.

டி.இமான் இசையமைத்திருக் கிறார். படத்தில் விக்ரம் பிரபுவுக்கு யானைப் பாகன் வேடம். இதற்காக அவர் முறையாக பயிற்சி பெற் றுள்ளார். படத்தின் படப்பிடிப்பு கிட்ட தட்ட முடிவுக்கு வந்துவிட்டது. இந் நிலையில் கும்கியின் ஓடியோ வெளி யிடப்பட்டது. ஓடியோ வெளி யீட்டு விழாவில் ரஜினிகாந்த், கமல் ஹாசன் கலந்துகொண்டனர்.

# விலங்குகளுடன் பத்மபிரியா

காட்டுப் பகுதியில் விலங்குகளுடன் பத்மப்பிரியா நடிக்கும் படத்தின் படப்பிடிப்பை நடத்த விலங்குகள் நல வாரியம் அனுமதி தர மறுத்து வருகிறது.

பழசிராஜா, பொக்கிஷம் உள்ளிட்ட படங்களில் நடித்திருப்பவர் பத்மப்பிரியா.

மலையாளத்தில் ஹரிஹரன் இயக்கும் படம் எழமாதே வரவு. என்.டி.வாசுதேவன் நாயர் கதை அமைத்திருக்கிறார்.

இதில் காட்டுவாசியாக நடிக்கிறார் பத்மப்ரியா. இம்மாதம் கேரளா காட்டுப்பகுதியில் தொடங்க இருந்த படப்பிடிப்பு விலங்குகள் நல வாரியம் அனுமதி தராததால் தடைபட்டு நிற்கிறது.

இது பற்றி ஹரிஹரன் கூறுகையில், இம்மாதம் படப்பிடிப்பு தொடங்குவதாக இருந்தோம். ஆனால் காட்டு பகுதியில் விலங்குகளுடன் பத்மப்பிரியா நடிக்கும் சில முக்கிய காட்சிகள் படமாக்க வேண்டி இருப்பதால் அதற்கான அனுமதி கிடைக்காமல் தாமதமாகிறது.


இதையடுத்து ஓகஸ்ட் மாதத்துக்கு படப்பிடிப்பை தள்ளி வைத்திருக்கிறோம். விலங்குகள் வாரியம் இதற்கான விதிமுறைகளை கடுமையாக்கி இருப்பதால் அனுமதிக்காக காத்திருக்கிறோம்.

இந்த இடைவெளியை படத்தில் பிற நடிகர், நடிகைகளை தெரிவு செய்ய பயன்படுத்திக் கொள்கிறேன். அழுத்தமான சமுதாய கருத்து,சுற்றுச்சூழல் பாதுகாப்பு, இயற்கை பாதுகாப்பு ஆகிய கருத்துக்களுடன் இக்கதை உருவாகி உள்ளது என்று தெரிவித்துள்ளார்





# சாதனைகளைக் கடந்து மனோரமா






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு குறிப்பு





## அழகு தரும் தானிய வகைகள்

### கடலைப்பருப்பு

கடலைப்பருப்பும் இதிலிருந்து மாவாகும் கடலைமாவும் சமையலறையில் அதிகமாகப் பயன்படுத்தக்கூடியது. ஆபத்தபாந்தவன் மாதிரி அநேக சந்தர்ப்பங்களில் கை கொடுக்கக் கூடியது இந்த கடலை மாவு தான். இது உணவுப் பொருளாக மட்டுமல்லாது, சிறந்த அழகு சாதானமாகவும் கருதப்படுகிறது.

எளிய, செலவில்லாத முகத்திற்குப் போடக் கூடிய பேக், கடலை மாவுதான். இது தோலை இறுக்கச் செய்யும். இறந்த செல்களை அகற்றக்கூடியது. நல்ல நிறமாக வர வேண்டுமென்பவர்கள் கடலை மாவை உபயோகித்தால் சருமம் பளிச்சென்று இருக்கும்.

கடலை மாவு ஒரு சிலருக்கு அலர்ஜியாவதுண்டு. அவர்கள் கடலை மாவுடன் பன்னீர், தேன், பால், தயிர் இவைகளில் ஏதாவது ஒன்றை சிறிதளவு கலந்து முகத்தில் பேக்காகப் போடலாம்.

### பச்சைப் பயறு

பொதுவாகவே எல்லோருடைய சருமத்திற்கும் பொருந்தக் கூடிய தானிய வகை பச்சைப் பயறு. இது பித்தத்தைப் போக்கக் கூடியது. புரதச் சத்து அதிகமாக இருக்கும். இதில் ஒட்டும் தன்மை (பசைத் தன்மை) அதிகம்.

நமது சருமம் புரதத்தால் ஆனது. உணவாகச் சாப்பிடும் போதும் புரதம் நமக்குத் தேவையான ஒன்று. அதே சமயம் புரதத்தை வெளிப் புறத்தில் கொடுக்கும் பொழுது சருமம் மென்மையாக மாறுகிறது. முளை கட்டின பச்சைப் பயறில் ஏராளமான சத்துக்கள் அடங்கி இருக்கின்றன.

பயத்தம் மாவுடன் பால், தேன், பன்னீர் கலந்து சருமத்திற்குச் பூச உபயோகப்படுத்தலாம். அல்லது வெள்ளரிச்சாற்றை பயத்தம் மாவுடன் கலந்து பேக்காகப் பயன்படுத்தலாம்.

எண்ணெய் குளியல் எடுக்கும்பொழுது சிலருக்கு சிகைக்காய் தேயத்துக் குளிப்பது, அலர்ஜியாக இருக்கும். கண் எரிச்சலைக் கொடுக்கும். அவர்களும் சரி சிறு குழந்தைகளுக்கு எண்ணெய் குளியலின் போது சரி பயத்தம் மாவு தேய்த்துக் குளிக்கலாம்.

உலர்ந்த சரும வகைக்கு பால் ஏடுடன் பயத்தம் மாவையும் எண்ணெய் சருமத்திற்கு பயத்தம் மாவுடன் ஆரஞ்சு சாற்றையும் கலந்து உபயோகப்படுத்தலாம்.

இதைத் தவிர வெள்ளரிச்சாறு, பன்னீர், இளநீர் இவைகளில் ஏதாவதொன்றைச் சேர்ப்பது சருமத்திற்கு எந்தவித தீங்கும் செய்யாது.





# கருவளையங்களை தவிர்க்கும் வழி





கண்ணின் கீழ் ஏற்படும் கருவளையங்களுக்கு, ரெட்டீன் - ஏ (Retin - A) எனப்படும் ரெட்டினாயிக் அமிலம் கொண்ட புதிய மருந்து நல்ல பலன் தருகிறது. இது சூரிய ஒளியால் உண்டாகும் பாதிப்பை நீக்கி சருமத்தின் மேற்புறமுள்ள பகுதிகளுக்கு இரத்த வோட்டத்தையும் அதிகரிக்கின்றது.

தினசரி இரவு தூங்கச் செல்லும் முன் கண்களுக்கு கீழ்புறம் சிறிதளவு ரெட்டீன் -ஏ க்ரீம் தடவி வந்தால் போதும். க்ரீமின் அளவு அதிகமானால் முகத்தில் வீக்கத்தினையும் வறட்சியையும் ஏற்படுத்தக்கூடிய பண்பு இதற்கு உள்ளது. கூடிய வரைக்கும் வெயிலில் செல்லும் போது சருமத்தைப் பாதுகாக்கக் கூடிய (Sunscreen Ointment) க்ரீம்களைப் பயன்படுத்த வேண்டும். ரெட்டீன் -ஏ ஒரு சில மாதங்கள் சென்ற பின்னரே நல்ல பலனளிக்கிறது.

### கொலாஜென் சிகிச்சை (Collagen Treatment):

சருமத்தை வழு வழுவென்று வைக்கக் கூடிய பண்பு கொலாஜென்னிற்கு உண்டு. இயற்கையில் கிடைக்கக் கூடிய இப்புரதமானது எல்லா உடல் திசுக்களிலும் காணப்படுகிறது. இச் சிகிச்சையில் கொலாஜென் ஊசி மூலமாக சுருக்கங்கள் தோன்றியுள்ள பகுதிகளில் செலுத்தப்பட்டு குழிவு ஏற்பட்டுள்ள இடங்களில் வைத்து நிரப்பப்படுகிறது.

இவற்றை பயன்படுத்துவதன் மூலம் உங்கள் முக அழகை மேலும் மெருகேற்றலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் நலம் தரும் விரல் முத்திரைகள்

என்.கணேசன்

சென்ற இதழ் தொடர்ச்சி

## அபான முத்திரை

கையில் நடு விரல் மற்றும் மோதிர விரலை மடக்கி அந்த இரண்டு விரல்களின் நுனியை பெரு விரல் நுனியால் தொடும் போது அபான முத்திரை ஏற்படுகிறது.

இந்த முத்திரை சர்க்கரை வியாதியைக் கட்டுப்படுத்த உதவுகிறது. மூலம் மற்றும் மலச்சிக்கலைப் போக்க இந்த முத்திரை பெருமளவு உதவுகிறது.



## அபான வாயு முத்திரை

அபான முத்திரையுடன் ஆட்காட்டி விரல் நுனியை பெருவிரலின் ஆரம்ப பாகத்தில் வைத்தால் அபான வாயு முத்திரை உண்டாகிறது. அதாவது நடுவிரல், மற்றும் மோதிர விரல் மடிக்கப்பட்டு அந்த விரல்களின் நுனியைப் பெருவிரல் நுனியால் தொட்டு, ஆட்காட்டி விரலை மடித்து பெருவிரலின் நுனி பாகத்தில் வைக்கும் போது இந்த முத்திரை உருவாகிறது.

இதய சம்பந்தமான குறைபாடுகளை நீக்கவும், இதயத்தை வலுப்படுத்தவும் இந்த அபான வாயு முத்திரை உதவுகிறது. அத்துடன் வாயுத் தொந்தரவுகளையும் இந்த முத்திரை வெகுவாகக் குறைக்கிறது.



## லிங்க முத்திரை

படத்தில் காட்டியபடி விரல்களைப் பின்னி இடது பெருவிரலை நீட்டிய நிலையில் விட்டு வலது பெருவிரலால் இடது பெருவிரலை சுற்றிப் பிடித்துக் கொள்ளும் போது லிங்க முத்திரை ஏற்படுகிறது.சளி, கபம் போன்ற கோளாறுகளை இந்த லிங்க முத்திரை வெகுவாகக் குறைக்கிறது.



இந்த முத்திரைகளை அமர்ந்து கொண்டும், நின்று கொண்டும், படுத்த நிலையிலும், நடந்து கொண்டும் கூட செய்யலாம். ஆனால் பரபரப்போ அவசரமோ இல்லாமல் அமைதியாக இருப்பது மிக முக்கியம்.

இந்த முத்திரைகளைச் செய்யும் கால அளவு பற்றி பல வித கருத்துகள் உள்ளன. அரை மணி முதல் முக்கால் மணி நேரம் வரை உங்களுக்குத் தேவையான முத்திரைகளைச் செய்யலாம் என்கிறார்கள்.

சிலர் பத்து அல்லது பதினைந்து நிமிட காலங்களில் சிறிது இடைவெளி விட்டு மூன்று முறை கூடச் செய்யலாம் என்று கூறுகிறார்கள்.

ஒரேடியாக நீண்ட நேரத்திற்குச் செய்ய ஆரம்பிக்காமல் சுமார் ஐந்து நிமிட காலம் செய்வதில் இருந்து ஆரம்பிப்பது நல்லது. பின் சிறிது சிறிதாக நேரத்தைக் கூட்டிக் கொண்டு செல்லுங்கள்.

இந்த முத்திரைகளால் வியக்கத்தக்க பெரும்பலன்கள் கிடைக்கின்றன என்று பல அறிஞர்கள் கூறுகிறார்கள்.

முற்றும்



# மெய்ஞான மருத்துவம்



வாஸ்த்து ஜோதிட நிபுணர்
மருதை பத்மராஜன்

ஒன்பது கிரகங்களின் ஜீவகாந்த இயக்கத்தில் ஏதேனும் ஒரு கிரக இயக்கத்தில் அதன் ஆகர்ஷணசக்தியில் குறைபாடு ஏற்பட்டால் அக்குறிப்பிட்ட கிரக சக்தியில் பிணைக்கப்பட்டுள்ள உறுப்புகள் பாதிப்படைய ஆரம்பிக்கின்றன. மீண்டும் பாதிப்படைந்த உறுப்பினை செயல்படுத்த அவ்வுறுப்பு பிணைக்கப்பட்டுள்ள கிரகத்தின் ஜீவகாந்த சக்தியை சேமிப்பதன் மூலம் அந்த உறுப்பினை செம்மையாக்கிவிட முடியும்.

கிரக சக்தியை உடலில் சேமிக்கும் முறையையும் அவ்வாறு சேமிக்கப்பட்ட கிரக சக்தியை, நோய் வாய்ப்பட்ட ஒருவருக்கும் பிரயோகிக்கும் முறையையும் கொல்லி மலை வாழ் ஓசானி சித்தரிடம் தான் கற்றுக் கொண்டேன்.

அவற்றிலிருந்து சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

கிரக சக்தியே மனித உடம்பை இயக்குகிறது:

மனித உடலானது மனதிலும், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களிலும். பஞ்ச பூதங்கள் ஒன்பது கிரகங்களிலும் ஒன்பது கிரகங்கள் மூலமும் முடிவும் இல்லாத எங்கும் வியாபித்து இருக்கும் இறை சக்தியிலும் பிணைக்கப்பட்டுள்ளது.

ஒன்பது கிரகங்களின் ஜீவகாந்த ஆற்றலின்தான் மனித சரீரத்தின் இயக்கம்நடைபெறுகிறது. இவற்றில்

*சூரியன்*-ஜீவகாந்த அலையிலிருந்து கண்ணும் இதயமும்,

*சந்திரன்* -ஜீவகாந்த அலையில் கணையமும், மூளையும் மற்றும் சரீரத்தின் நீர்தன்மையும்,

*புதன்* -ஜீவகாந்த அலையில் தசவாயுக்களும், நரம்பு மண்டலமும்

*சுக்கிரன்* -ஜீவகாந்த அலையில் இந்திரிய உறுப்புகளும், விந்து நாதமும்,

*செவ்வாய்* -ஜீவகாந்த அலையின் உஷ்ணமும் ரத்த நாளமும், ரத்தமும்,

*சனி* -ஜீவகாந்த அலையில் பற்களும், எலும்பும், எலும்பு வளர்ச்சிக்கு தேவையான தாதுக்களும்

குரு-ஜீவகாந்த அலையில் தோலும், விந்து நாதத்திலுள்ள உயிரணுக்களும்,

*ராகு மற்றும் கேது* -ஆகர்ஷண அலையில் உடலில் விஷயம் நீக்கும் தன்மையும் பிணைக்கப்பட்டுள்ளன.

ஒரு குழந்தையானது பூமியில் பிறக்கும்பொழுது ஒன்பது கிரகங்களின் ஜீவகாந்த அலை நல்லநிலையில் இருக்கும் போது பிறந்துவிட்டால் பிறப்பிலிருந்து இறப்புவரை நோய் நொடிகள் பெரியதாக அண்டுவதில்லை. ஆனால் மேற்படி கிரகங்களின் ஆகர்ஷணசக்தி குறைவாக உள்ள நாளில் பிறந்துவிட்டால் சிறு வயதிலிருந்து இறப்பு காலம் வரை நோய் நொடியால் பாதிக்கப்பட்டு மருந்து மாத்திரையே வாழ்க்கையாகிவிடும். ஒருவருக்கு உடலில் ஏதேனும் நோய் ஏற்பட்டால் உள்ளிட்ட மருத்துவம் அனைத்தும் அந்நோயால் பாதிக்கப்பட்ட உடல் உறுப்புகளுக்கு வைத்தியம் செய்கிறது. அனைத்து மருத்துவமும் இதைத்தான் செய்கிறது.

ஆனால் சாஸ்திரம் மட்டும்தான் நோய்க்கான காரணம் உடலில் அல்ல அவ்வுடலை இயக்கும் கிரகத்தின் ஜீவகாந்தத்தில்தான் பிரச்சினை இருக்கிறது என்றும், அக்கிரகத்தின் ஜீவகாந்த சக்தியை ஒழுங்குபடுத்தினால் பாதிக்கப்பட்ட உடல் உறுப்பு தானாகவே சரியாகும். என உறுதியாக கூறுகிறது.

எந்த நோயாக இருந்தாலும் உடலுக்கு வைத்தியம் செய்வது தற்காலிக தீர்வாகத்தான் அமையுமேன்றி நிரந்தரத் தீர்வாக அமையாது.

ஏனெனில் உடலுக்கு வைத்தியம் செய்வதைவிட உடல் உறுப்புகள் பிணைக்கப்பட்டிருக்கும் கிரகங் களின் ஜீவகாந்த ஆற்றலையை முறைப்படுத்தினாலே சரீர குற்றம் தானே சரியாகும். அனைத்து மருத்துவமும், உடலுக்குத்தான் வைத்தியம் செய்கிறதேயன்றி உடல் பிணைக்கப்பட்டிருக்கும் கிரக ஜீவகாந்தத்தை ஒழுங்குபடுத்துவதில்லை. எனவேதான் நாம் பலநோய்க்கு வாழ்நாள் முழுவ தும் மருந்து சாப்பிடுகிறோம்.

ஒருவருக்கு உடலில் எந்த உறுப்பு பாதிக்கப்பட்டிருக்கிறதோ அவ்வுறுப்பு பிணைக்கப்பட்டிருக்கும் கிரகத்தின் ஜீவகாந்த அலையை ஒழுங்குபடுத்தினால் பாதிக்கப்பட்ட உறுப்பு மீண்டும் நல்லமுறையில் செயல்பட தொடங்கும். மேலும் மீண்டும் அந்நோய் வராமலும் காக்கும்.

ஒன்பது கிரகங்களின் ஜீவகாந்த அலை காற்றில் இருப்பதால் தான் நாம் தூங்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் நாம் தூங்குவதோ கிரகங்களின் ஜீவகாந்த அலையை உடலில் சேமிக்கத்தான்.

மருத்துவம், கெட்டுப்போன செயல்பாடு பாதிக்கப்பட்ட உறுப்பிற்கு வைத்தியம் செய்கிறது. ஆனால் சாஸ்திரம் மேற்படி உறுப்பு இயங்க காரணமான கிரக சக்தியை மீண்டும் பெற வைக்க என்னவழி என்று கூறுகிறது.


ஒன்பது கிரக சக்தியை உடலில் சேமிக்கவும், அதை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை அறியவும் ஒன்பது கிரகங்களின் நோய் தாக்கம் எவை என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ள செப்டெம்பர் மாத இதழினைப் பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாடெங்கும் எஸ்.எல்.பி.எல். காய்ச்சல்




ஐ.பி.எல். (இந்தியன் பிரீமியர் லீக்), பி.பி.எல். (பங்களாதேஷ் பிரீமியர் லீக்) என்பவற்றைத் தொடர்ந்து இலங்கையிலும் இருபது-20 கிரிக்கெட் காய்ச்சல் பிடித்துள்ளது. அதாவது, எஸ்.எல்.பி.எல். (சிறிலங்கன் பிரீமியர் லீக்) இருபது-20 தொடர் கடந்த 11ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 30ஆம் திகதி-வரை இலங்கையில் நடபெறுகிறது.

இத்தொடர் கடந்த வருடம் நடைபெறவிருந்தபோதும், பல்வேறு குழப்பங்கள் காரணமாக அப்போது இத்தொடரை நடத்த முடியவில்லை.

எனினும், இலங்கைக் கிரிக்கெட்டின் கடும் முயற்சியின் பயனாக இந்த ஆண்டு இத்தொடரை நடத்தக்கூடிய வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இத்தொடரில் மொத்தம் 7 அணிகள் பங்கேற்றுள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாகாணங்களைப் பிரதிபலிப்பனவாக உள்ளன. இலங்கையில் மொத்தம் 9 மாகாணங்கள் உள்ளபோதும், 7 மாகாண அணிகளே இம்முறை களமிறங்குகின்றன. அடுத்த தொடரில் மேலும் 2 அணிகள் சேர்க்கப்பட்டு 9 அணிகள் களமிறங்கும் என விளையாட்டுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இம்முறை களமிறங்கியுள்ள வயம்பா அணிக்கு மஹேல ஜெயவர்த்தனவும், கண்டுரட்ட அணிக்கு குமார் சங்கக்காரவும் (காயம் காரணமாக சங்கக்கார விளையாடுவது சந்தேகம்), நகெனகிர அணிக்கு அஞ்சலோ மத்யூசும், ஊவா அணிக்கு கிறிஸ்கெய்லும், உதுர அணிக்கு முத்தையா முரளிதரனும், ருகுன அணிக்கு லசித் மாலிங்கவும், பஸ்னகிர அணிக்கு திலகரட்ண டில்ஷானும் தலைமை தாங்குகின்றனர்.

இந்த அணிகளில் வெளிநாட்டு வீரர்களும் இடம்பிடித்துள்ளனர். இந்திய வீரர்கள் பங்கேற்காதமை பெரும் ஏமாற்றமே.

எனினும் இத்தொடர் தற்போது வெற்றிகரமாக நகர்ந்துகொண்டிருக்கிறது என்பதுதான் கண்கூடு.

## எஸ்.எல்.பி.எல்.-2012 போட்டி அட்டவணை

**ஒகஸ்ட் 11**
நாகெனகிர - ருகுன
ஆர்.பிரேமதாஸ மைதானம் கொழும்பு

பஸனகிர - கண்டுரட்ட
ஆர்.பிரேமதாஸ மைதானம் கொழும்பு

**ஒகஸ்ட் 12**
உதுர - வயம்பா
ஆர்.பிரேமதாஸ மைதானம் கொழும்பு

ஊவா - பஸனகிர
ஆர்.பிரேமதாஸ மைதானம் கொழும்பு

**ஒகஸ்ட் 13**
கண்டுரட்ட - நகெனகிர
ஆர்.பிரேமதாஸ மைதானம் கொழும்பு

**ஒகஸ்ட் 14**
ருகுன - உதுர
ஆர்.பிரேமதாஸ மைதானம் கொழும்பு

**ஒகஸ்ட் 17**
வயம்பா - ஊவா
பல்லேகல தேசிய கிரிக்கெட் மைதானம்

**ஒகஸ்ட் 18**
பஸ்னகிர - நகெனகிர
பல்லேகல தேசிய கிரிக்கெட் மைதானம்

கண்டுரட்ட - உதுர
பல்லேகல தேசிய கிரிக்கெட் மைதானம்

**ஒகஸ்ட் 19**
வயம்ப - பஸ்னகிர
பல்லேகல தேசிய கிரிக்கெட் மைதானம்

உதுர - ஊவா
பல்லேகல தேசிய கிரிக்கெட் மைதானம்

**ஒகஸ்ட் 20**
கண்டுரட்ட - ருகுன
பல்லேகல தேசிய கிரிக்கெட் மைதானம்

நகெனகிர - வயம்ப
பல்லேகல தேசிய கிரிக்கெட் மைதானம்

**ஒகஸ்ட் 21**
ருகுன - ஊவா
பல்லேகல தேசிய கிரிக்கெட் மைதானம்

உதுர - பஸனகிர
பல்லேகல தேசிய கிரிக்கெட் மைதானம்

**ஒகஸ்ட் 24**
வயம்ப - கண்டுரட்ட
ஆர்.பிரேமதாஸ மைதானம் கொழும்பு

ஊவா - நகெனகிர
ஆர்.பிரேமதாஸ மைதானம் கொழும்பு

**ஒகஸ்ட் 25**
பஸனகிர - ருகுன
ஆர்.பிரேமதாஸ மைதானம் கொழும்பு

கண்டுரட்ட - ஊவா
ஆர்.பிரேமதாஸ மைதானம் கொழும்பு

**ஒகஸ்ட் 26**
நகெனகிர - உதுர
ஆர்.பிரேமதாஸ மைதானம் கொழும்பு

ருகுன - வயம்ப
ஆர்.பிரேமதாஸ மைதானம் கொழும்பு

**ஒகஸ்ட் 28**
முதலாவது அரையிறுதி
ஆர்.பிரேமதாஸ மைதானம் கொழும்பு
இரவு 8 மணி

**ஒகஸ்ட் 29**
இரண்டாவது அரையிறுதி
ஆர்.பிரேமதாஸ மைதானம் கொழும்பு
இரவு 8 மணி

**ஒகஸ்ட் 31**
இறுதியாட்டம்
ஆர்.பிரேமதாஸ மைதானம் கொழும்பு
இரவு 8 மணி



# ஒலிம்பிக்கில் 19 பதக்கங்கள் வென்று பெல்ப்ஸ் சாதனை

## உடன் பறந்தது ஒபாமாவின் பாராட்டு

லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் ஆண்கள் நீச்சல் பிரிவு போட்டியில் அமெரிக்காவின் மைக்கல் பெல்ப்ஸ் வெள்ளிப்பதக்கம் வென்று ஒலிம்பிக் போட்டிகளில் அதிக பதக்கங்களை வென்ற வீரர் என்ற புதிய சாதனையைப் படைத்தார்.


இவர் ஒலிம்பிக் போட்டிகளில் இதுவரை 15 தங்கங்கள், 2 வெள்ளிகள், 2 வெண்கலங்கள் என மொத்தம் 19 பதக்கங்களை வென்று புதிய சாதனை படைத்தார்.

இதற்கு முன்னர் ரஷ்யாவின் ஜிம்னாஸ்டிக் வீரரான லாரிசா லாட்னினா, 18 பதக்கங்களை வென்று அதிக பதக்கங்களை வென்ற வீரர்கள் பட்டியலில் முதலிடத்தில் இருந்தார்.

தற்போது இவரின் சாதனையை மைக்கல் பெல்ப்ஸ் முறியடித்துள்ளார்.

பெல்ஸின் இந்தச் சாதனைக்கு அமெரிக்க ஜனாதிபதியான பராக் ஒபாமா உடனடியாகவே தனது டுவிட்டர் பக்கத்தில் பாராட்டுத் தெரிவித்திருந்தார். அவர் தனது வாழ்த்துச் செய்தியில்,

ஒலிம்பிக் வரலாற்றில் அதிக பதக்கங்களை வென்ற வீரர் என்ற சாதனையைப் படைத்ததன் மூலம் நாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ளார் என்று தெரிவித்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்-ஜாமிஉல் அழ்ஃபர்

## (சம்மாங்கோட்டுப் பள்ளி)

தினமகுடியின் புனிதத்தலங்கள் பார்வையில் இம்முறை நோன்பினை நினைவில் கொண்டு கொழும்பு பெற்றா என்கின்ற புறக்கோட்டை 2ஆம் குறுக்குத்தெருவில் பல வியாபார வணிகமையங்களுக் கிடையே சிவப்பு வண்ணத்தில் கம்பீரமாய் காட்சியளிக் கிறது.

சம்மாங்கோட்டு பள்ளியின் சிறப்புப் பற்றிய விபரங்கள் இதோ உங்களுக்காக...

இலங்கைக்கான இஸ்லாமிய வரலாறு ஆயிரம் வரு டங்களை தாண்டியது. இஸ்லாத்தின் ஆரம் பம் முதலே இரத்தினதீவு என பெயர் பெற்ற இந்த நாட் டுக்கு அரேபிய வணி கர்களின் தொடர்பு இருந்து வந்தது.

அவர்கள் இங்கு வந்து கால் வைக்கும்போது இத் தீவின் பழங் குடி மக்க ளான முஸ் லிம் அல்லா- தோர் இருந்தனர். அவர்களோடு கொண்ட தொடர்பு இஸ் லாத்தின் பாரம்பரியத்திற்கு காரணமாக இருந்தது.

தொழுகைக்கு வேண்டிய வண்ணம் இலங்கையில் எல்லா பாகத்திலும் பள்ளிகளை நிறுவினர்.

அவற்றில் வரலாற்று சிறப்பு மிக்க ஒன்றுதான் இந்த (அல்-ஜாமிஉல் அழ்பர்) செந்தமிழில் சம்மாங்கோட்டுப் பள்ளி யென்றும் சிங்கள மொழியில் "ரது பள்ளிய" என்று அழைக் கப்படுகிறது.



1990-ஆம் ஆண்டுகளில் இப்பகு தியில் ஐந்து வேளையும் தொழு வதற்கு பள்ளி வாசல் ஒன்று இல்லாமல் இருந்த காரணத் தினால். அன்றைய கால கட்டத்தில் தென்னிந்திய தமிழகக் கடலோர பகுதி களில் இருந்து. தொழில் நிமித்தம் இலங்கை வந்திருந்த எமது முன் னோர்கள் 1906-ஆம் ஆண்டு புறக்கோட்டை யின் முக்கியமான கேந்திரப்பகுதியில் ஒரு நிலத்தை வாங்கி பள்ளிவாசல் கட்ட ஆரம்பித்து. 1908-ஆம் ஆண்டு மிகச்சிறப்பாக கட்டி முடித்து வஃக்ப் செய்து மக்கள் தொழுவதற்காக சமர்ப்பணம் செய்துள் ளார்கள்.

இன்றைக்குச் சுமார் 100வருடங்களுக்கு முன் இப்பள்ளி வாசல் உருவாகுவதற்காக தாராளமான பொருளுதவியி னையும் பண உதவியினையும் அயராத உழைப்பினையும் வழங்கிய நம் முன்னோர்களை போற்றியாக வேண்டும்.

**தனித்துவமிக்க பள்ளி வாசல்–**

அல்-ஜாமிஉல் அழ்ஃபர் இறையில்லத்தின தனித்து வத்தையும் சிறப்பையும் ஆராய்ந்து பார்ப்போமானால் இதன் உட்புற வெளிப்புற அமைப்புகள் இஸ்லாமிய கட்டிட கலை நுணுக்கத்தில் உயரிய அழகிய வேலைப்பாடுகளுடன் மிகவும் எழிலாக அமைந்துள்ளன. இது கொழும்புத்துறைமுகத்தை அன் மித்திருப்பதால் இங்கு வரும் வெளிநாட்டவரும் வணிகர்களும் வரலாற்று ஆசிரியர்களும் அதன் அழகிய தோற்றத்தைக் கண்டு பிரமித்து நிற்பதைக் காணலாம்.



இப்பள்ளியில் நாம் தொழும் போது ஏற்படும் இறைபக்தியும் மன அமைதியும் மன ஒருமைப்பாடும் வார்த்தைகளால் வர்ணிக்க முடி யாதளவு அத்தனை சிறப்பானது. இங்கு நடந்த பல முக்கிய நிகழ்வு களில் 1920-1933-1950-1958 மற் றும் 1976 ஆகிய ஆண்டுகளில் நிகழ்வுற்ற பக்திமிகு அற்புதத் தைக் குறிப்பிடலாம்.

புனித திரு மறையினை முழு வதும் மனப்பாடமாக்கி இதயங்களில் பதித்திருந்த ஹாஃபிழ் கள் கிருபை களுக்குரிய ரமழானில் இரண்டே இரண்டு ரக்அத்துக்களில் புனித குர்ஆன் முழுவதையும் ஓதி முடிக்க பெரும் திரளான மக்கள் பின்னின்று தொழுகையை நிறைவேற்றியது.

என்றும் நெஞ்சில் நிலைத்து விட்ட மறக்கமுடியாத நிகழ்வுகளாகும். இதுபோன்ற நிகழ்வுகள் இஸ் லாத்தின் மீது மக்களுக்கு அதித ஈடுபாட்டடையும் அல் குர்ஆனை மனனம் செய்வதில் இளைஞர்களுக்கு மிகுந்த ஆர்வத்தை யும் ஏற்படுத்தியது என்றால் அது மிகையல்ல ஆன்மீகத் திலும் சமூகத்திலும் பெரும்பணியாற்றி வருகிறது.

**பள்ளியின் விரிவாக்கம்–**

அன்றைய காலகட்டத்தில் இப் பள்ளி வாசலுக்குத் தொழவந்தவர்களின் தொகை 500-ஐத் தாண்டவில்லை. ஆனால் 1500பேர் வரை வணங்கக்கூடிய பள்ளிவாசலையே எம்முன்னோர்கள் நிர்மானித்தனர்.

எனவே புதுப்பித்தல் மற்றும் அழகுபடுத்தும் சில வேலை-களைத் தவிர நீண்டகாலமாக விரிவாக்கம் செய்யும் தேவை ஏற்படவில்லை.

பின் 1950-களில்(சுமார் 50ஆண்டுகளுக்கு முன்பு) ஜீம்ஆ தொழுகை தொடங்கியதும் மக்கள் எண்ணிக்கை அதிகரித் தது.

15ஆண்டுகளாக பற்பல வசதிக்குறைவுகளுடன் வணக்க கடமைகள் நிறைவேற்றிக் கொண்டிருந்தன.

இப் பொழுது சுமார் 100 வருடங்களுக்கு பிறகு தொழ வருபவர்களின் எண்ணிக்கை ஜீம்ஆ நாட்களில் சுமார்6000 ஆகவும் இதர நாட்களில் 2000 ஆகவும் உயர்ந்து.

இலங்கையிலேயே மக்கள் அதிக மாக தொழவரும் பள்ளியாகத் தனித் துவம் பெற்றிருக்கின் றது.

**புதிதாக அமையப்போகும்**
**அதிநவீன பள்ளிவாசல்**

சுமார் 50.000சதுர அடி அளவில் 4மாடி கட்டிட அமைப்புடன் கிட்டதட்ட 10.000பேர் ஒரே நேரத்தில் தொழக் கூடிய வசதியுடையதாக விளங்கும் வண்ணம்.

நிர்மானிப்பதற்கு தற்போதைய கட்டுமானச் செலவு மட்டும். 26.5 கோடி (இருபத்தாறுகோடியே ஐம்பது இலட்சம்)ரூபா தேவையென கட்டிடக் கலை பொறியியலாளர்கள் மதிப்பீடு செய்துள்ளனார்.

மேலும் இப்பொழுது 3ஆலிம்க ளும் 3 அஸ்ஸின்மார்களும் மற்றைய இதர வேலைகளுக்கு 6 பணி யாட்களும் இருக்கிறார்கள்.

கொழும்புக்கு தேவைகளின் நிமித்தம் உம்றா. ஹஜ்-பிரயாணங்கள் செய்ய வருபவர்களுக்கும் வுளுச் செய்யும் கடமைகள் முடிக்கவும், நவீனமான முறையில் வசதிகள் செய்யப்படவுள்ளன.

(எல்லாம் வல்ல அல்லாஹ் நல்லருளாசியோடு)

சிவப்பு பள்ளியென அழைக்கப்படுகின்ற பள்ளிவாசலை விரிவாக கட்டியெழுப்ப தங்களால் முடிந்தளவு உதவியி னை வழங்குமாறு மிகவும் பணிவன்புடன் பரிபால சபையினர் கேட்டுக்கொள்கின்றனர் மிகவிரைவில் புதுப்பொழிவு பெற தினமகுடி சார்பாக வாழ்த்துகிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை அரசுக்கு ஒரு கதை



பண்டைய சீனத்தில் பதிமூன்றாம் நூற்றாண்டில் வடக்கு சுங் வம்ச சக்கரவர்த்திகள் ஆண்ட காலத்தில் நடந்த ஒரு உண்மை நிகழ்ச்சி இது. ஒரு எல்லை மாகாணத்தில் கான் யுவான் (Con Yuon) என்ற அதிகாரி மேயராகப் பொறுப்பேற்றபோது மாகாணத் தலைமையிடத்தில் பொலிஸ் மற்றும் இராணுவ வீரர்கள் யாருமே இல்லாதது கண்டு ஆச்சரியப்பட்டார். அவரது அதிகாரிகளை விசாரித்த போது இராணுவமும் பொலிஸூம் மாகாணத்தின் ஒரு எல்லையில் மூண்ட கலவரத்தை அடக்கச் சென்றிருப்பதாகத் தகவல் கிடைத்தது.

அவர் பொறுப்பேற்ற மூன்றாவது நாளில் இன்னொரு எல்லையில் உள்ள, அவரது மாகாண அதிகார வரம்புக்கு உட்பட்ட, பழங்குடி மக்கள் ஈட்டி, வில் போன்ற ஆயுதங்களுடன் நகர வாயிலில் குவிந்து இருக்கும் செய்தி வந்தது. கான் யுவான் தன் துணை அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். துணை அதிகாரிகள் நகரத்தின் பிரதான கதவை இழுத்து மூடி பக்கத்து மாகாணங்களிடம் இருந்து இராணுவ உதவி பெறுவதே உத்தமம் என்றார்கள். அப்படி இராணுவ உதவி வரும் வரை தாக்குப் பிடிக்க முடிந்தால் அது பெரியதொரு அதிர்ஷ்டம் அதைத் தவிர வேறு வழியில்லை என்றார்கள்.

கான் யுவான் கேட்டார். "அந்தப் பழங்குடியினர் திடீர் என்று போராடக் காரணம் என்ன?"

அவரது துணை அதிகாரிகள் படிப்பறிவற்ற பழங்குடி மக்களுக்கு அதற்கெல்லாம் காரணம் பெரியதாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றார்கள். அற்ப சொற்ப காரணங்களுக்காகக் கூட அவர்கள் போராடத் துணிபவர்கள் என்று சொன்னார்கள். அதனால் முதல் வேலையாகப் பக்கத்து மாகாணங்களில் இருந்து இராணுவ உதவி பெற ஆளனுப்ப அவசரப்படுத்தினார்கள்.

கான் யுவானோ முதலில் பழங்குடி மக்களைச் சந்திக்க ஆளனுப்புவதே சரி என்று சொன்னார்கள். காரணம் அறியாமலேயே அவர்களை அடக்கி போராட்டத்தைத் தோல்வியடையச் செய்தாலும் இது போன்ற புரட்சிகள் மறுபடி வெடிக்க சாத்தியமுண்டு என்பதால் முதலில் யாராவது சென்று அவர்களைச் சந்தித்து என்ன பிரச்சினை என்பதை அறிந்து கொள்ளச் சொன்னார். பழங்குடி மக்களைச் சென்று சந்திப்பதில் சிறிதும் நாட்டமில்லாத அவர்கள் அவர் சொல்லுவது யதார்த்தத்திற்கு ஒத்து வராதது என்று கருதினார்கள். யாரும் போவதற்குத் தயங்கினார்கள். ஒரு சிலராகப் போய் பழங்குடியினரைச் சந்திப்பது ஆபத்தானது என்றார்கள்.

அவர்கள் தயக்கத்தைக் கண்ட மேயர் கான் யுவான் தானே சென்று பழங்குடியினரைச் சந்திப்பதாகச் சொன்னார். அவர்கள் அவரைக் கூடுமான வரை தடுக்க முயன்றார்கள். ஆனால் அவர் கேட்பதாக இல்லை. துணைக்கு இரண்டு வயதான வேலையாட்களை அழைத்துக் கொண்டு கிளம்பினார். அவரது துணை அதிகாரிகள் இந்த முட்டாள் மேயர் திரும்பவும் உயிரோடு திரும்ப மாட்டார் என்று தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

ஒரு படையை எதிர்பார்த்திருந்து அதை எதிர்கொள்ளவும் தயாராக இருந்த பழங்குடி மக்கள் ஒரு தனிமனிதர் குதிரையில் இரு வேலையாட்களுடன் வந்த போது ஆச்சரியப் பட்டார்கள்.

கான் யுவான் அவர்களிடம் சொன்னார். "நான் இந்த மாகாணத்திற்கு புதிய மேயராக சமீபத்தில் பொறுப்பு எடுத்துக் கொண்டவன். உங்களுடைய போராட்டத்திற்குக் காரணத்தை அறிய விரும்புகிறேன். தயவு செய்து தங்கள் தலைவரிடம் என்னை அழைத்துச் செல்லுங்கள்"

அவர்கள் ஆச்சரியம் மேலும் அதிகரித்தது. அவர்கள் அவரை அவர்களுடைய தலைவரிடத்தில் அழைத்துச் சென்றார்கள். நகர எல்லையைக் கடந்து காட்டிற்கு பழங்குடியினர் தலைவரை சந்திக்கச் செல்வதில் ஆபத்தை உணர்ந்த அவருடைய வயதான வேலையாட்கள் ஏதேதோ காரணங்கள் சொல்லி நின்று விட்டார்கள். ஆனால் கான் யுவான் தனியாகவே பழங்குடியினர் தலைவரை சந்திக்க குதிரையில் பயணத்தைத் தொடர்ந்தார்.

பழங்குடியினர் தலைவருக்கும் இவரைக் கண்டவுடன் வியப்பு. அவரிடம் கான் யுவான் சொன்னார். "நான் புதியதாக மேயராக பதவி ஏற்றவன். முறைப்படி தாங்கள் தான் என்னை வந்து சந்தித்திருக்க வேண்டும். ஆனால் அவசர நிலைமை காரணமாக நானே இங்கு வர வேண்டியதாகி விட்டது. பரவாயில்லை. உங்கள் இன மக்கள் திடீர் என்று போராட்டம் நடத்தக் காரணம் என்ன?"

அவரைத் தகுந்த மரியாதையுடன் வரவேற்று உபசரித்த பழங்குடி மக்கள் தலைவர் முந்தைய மேயரின் ஆட்சியில் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் அவர் நடத்திய முறைகேடுகளையும் பழங்குடி மக்களுக்கு விதித்த அநியாய அதிக வரிகளையும் அதனால் அவர்களுக்கு வரப் போகும் பனிக்காலத்திற்குத் தேவையான் உணவின்மையையும் ஆடுமாடுகள் இல்லாததையும் விளக்கினார்.

கான் யுவான் அவர்கள் சொன்னதில் இருந்த நியாயத்தை உணர்ந்தார். "முந்தைய மேயர் உங்களிடம் அநீதியாக நடந்து கொண்டதற்கு நான் உங்களிடம் மன்னிப்பு கோருகிறேன். இப்போது நீங்கள் என் பொறுப்பில் உள்ளவர்கள். உங்களுக்கு நல்லபடியாக வாழ வழி செய்து தருவது என் கடமை. நான் உங்களுக்குத் தேவையான அனைத்தையும் செய்து தருகிறேன். இப்போது இருட்டி விட்டது. அதனால் இன்று உங்களுடன் தங்கி விட்டு நாளை காலை செல்கிறேன். என்னுடன் உங்கள் ஆட்களை அனுப்பினால் அவர்களுடன் உணவுப் பொருள்களையும் கால்நடைகளையும் அனுப்பி வைக்கிறேன்"

அன்று அவர்களுள் ஒருவராக அவர்களுடனே தங்கி மறுநாள் அவர்களில் சிலரை அழைத்துக் கொண்டு கான் யுவான் நகரத்திற்குத் திரும்பினார். அவர்களுடன் அவர் வருவதைக் கண்ட அவருடைய துணை அதிகாரிகள் அவரைப் பணயக்கைதியாக அந்தப் பழங்குடியினர் அழைத்து வருவதாக எண்ணிக் கொண்டு அவர்களைத் தாக்க ஏற்பாடுகள் செய்தார்கள். ஆனால் கான் யுவான் அவர்களைத் தடுத்து உண்மையை விளக்கி பல தொன்கள் உணவு தானியங்களையும் நூற்றுக் கணக்கான ஆடு, மாடுகளையும் அந்தப் பழங்குடி மக்களுக்கு உடனடியாக அனுப்பிவைக்க ஏற்பாடு செய்தார். அவரைத் தெய்வமாகப் போற்றிய பழங்குடி மக்கள் எந்தக் காலத்திலும் எந்த நிலையிலும் என்ன உதவி அவருக்குத் தேவைப்பட்டாலும் தங்கள் உயிரைக் கொடுத்தாவது செய்வோம் என்று வாக்குறுதி தந்தனர். அது போலவே அவர் மேயராக இருந்த வரை நன்றியுடன் இருந்தார்கள்.

பல சமயங்களில் பிரச்சினைகளுக்கு உண்மையான காரணங்கள் என்ன என்பதை அறிந்து கொண்டு சரிவர அணுகினாலே அவற்றில் பாதிக்கு மேல் சரியாகி விடும். நேரடியான அறிவு பூர்வமான அணுகுமுறையால் மலை போன்ற பிரச்சினைகளும் நம்மால் சரி செய்யக் கூடிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவுக்கு இலகுவாகி விடும். அதே நேரத்தில் சிறிய பிரச்சினைகள் கூட மனிதர்களின் அலட்சியத்தாலும் ஈகோவினாலும் முட்டாள்தனத்தாலும் பூதாகரமாக மாறி விடுவதுண்டு.

இந்த உதாரணத்தில் தன் துணை அதிகாரிகள் சொன்னதைக் கேட்டு கான் யுவான் படை திரட்டி அந்தப் பழங்குடி மக்களை ஒடுக்க நினைத்திருந்தால் ஏராளமான உயிர்ச்சேதம் இரு பக்கத்திலும் நிகழ்ந்திருக்கும்.

அப்படியே அவர்கள் ஒடுக்கப்பட்டாலும் கூட அது தற்காலிகமாகவே இருந்திருக்கும். சரியான சந்தர்ப்பத்திற்காக அவர்கள் காத்துக் கொண்டு இருப்பார்கள். அவர்கள் அரசாங்கத்தின் தலைக்கு மேல் தொங்கும் கத்தியாகவே என்றும் இருந்திருப்பார்கள். கான் யுவான் தன் தலைமைப் பண்பினாலும் அறிவு கூர்மையாலும் பெரிய பிரச்சினையை சமாளித்ததோடு அவர்களைத் தனக்கு உதவக்கூடிய பெரும்பலமாக ஆக்கிக் கொண்டதில் இராஜதந்திரியாகவும் நல்ல தலைவனாகவும் மாறி விட்டார். அவருடைய துணை அதிகாரிகள் ஆரம்பத்திலும் சரி கடைசியிலும் சரி தவறான முடிவுகளை எடுப்பவர்களாகவே இருந்தாலும் அதை அனுமதிக்காமல் சரியாக பிரச்சினையை கான் யுவான் அணுகியதால் அப்போதைக்கு மட்டுமல்லாமல் பிற்காலத்திலும் பழங்குடி மக்கள் மூலமாக வர முடிந்த பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி அவர் வைத்து விட்டார்.

எதிர்ப்பவர்கள் எல்லாம் எதிரிகள் அல்லர். பல சமயங்களிலும் எதிர்ப்பிற்கு வலுவான நியாயமான காரணங்கள் இருக்கக் கூடும். அதை அலட்சியம் செய்வது யாருக்கும் நல்லதல்ல.

உண்மையைக் காண மறுப்பதும் ஒரு சூழ்நிலை பிரச்சினையாக மாற அனுமதிப்பதும் முட்டாள்தனம். சிறியதாக இருக்கையில் கையால் கிள்ளி விடுவதை விட்டு விட்டு மரமாக அனுமதித்துப் பின் கஷ்டப்பட்டு கோடாரியால் வெட்டி வீழ்த்துவது அறிவுடைமையும் அல்ல இனிமையானதுமல்ல.

சிந்தித்துப் புரிந்து கொள்வதற்குப் பதிலாக கோபித்துக் கொதித்தெழுவது எந்தப் பிரச்சினையையும் வளர்த்திக் கொண்டே போகுமே தவிர தீர்த்து வைக்காது. எந்தப் பிரச்சினையிலுமே அதன் மூல காரணத்தைத் தெரிந்து கொள்வதும் அதைச் சரி செய்யத் தேவையானதைத் தயக்கமில்லாமல் செய்யத் துணிவதுமே மிக முக்கியம். வேரை அழிக்காமல் கிளைகளை வெட்டிக் கொண்டிருந்தால் திரும்பத் திரும்ப அதை நாம் எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.

அதே போல சில பிரச்சினைகளை சுற்றி வளைத்து அணுகாமல் நேரடியாக அணுகினால் அவற்றை சீக்கிரமாகவே தீர்த்து வைக்க முடியும். ஆனால் பிரச்சினைகளால் அதிகம் பாடுபடுவர்கள் பிரச்சினைகளிலேயே மூழ்கிக் கொண்டிருப்பவர்கள் பிரச்சினையே அவர்களிடம் இந்த நேரடி அணுகுமுறை இல்லாதிருப்பது தான். அவர்கள் எதையும் சம்பந்தப்பட்டவர்களிடம் நேரடியாகப் பேசித் தெரிந்து கொள்ளவோ தெரிவிக்கவோ மாட்டார்கள்.

இரண்டாம் மனிதர் மூன்றாம் மனிதர் மூலமாகவே கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்படும். எப்போதுமே சுற்றி வளைத்துப் போகும் கருத்துக்கள் உள்ளது போலவே போய்ச் சேர்வதில்லை. அந்த இரண்டாம் மனிதர் மூன்றாம் மனிதர் நேர்மையானவராகவும் நல்ல எண்ணம் கொண்டவராகவும் இல்லா விட்டாலோ அது கண்டிப்பாக பிரச்சினைகள் இன்னும் பெரிதாக்குவதாகவே இருக்கும் இலங்கை அரசுக்கு இந்தக் கதை பொருத்தமானதாக இருப்பதால் தினமகுடி உங்களோடு சேர்ந்து இதனை அவர்கள் கவனத்துக்கு முன்வைக்க விரும்புகிறது.

-என்.கணேசன்





# வானமே கூரை

எனக்கு கல்யாணம்.. எனக்கு கல்யாணம்" என்கின்ற பாணியில் ஊரை சுற்றி வருபவர்களை மனநலம் குன்றியவர்களாக நமக்கு சினிமா காட்டியுள்ளது. இந்திரன் அப்படிப்பட்டவன் அல்லன். அமைதியே உருவானவன். ஏன் இப்படி ஆனான்..யாருக்கும் தெரியாது.

மாதா கோவிலில் மணியடித்தால் இவன் செயலாக இருக்கும். பெருமாள் கோவில் மணியடித்தாலும் இவனாக தான் இருக்கும். காலையில் அர்ச்சகர் வீட்டிற்கு போய் நிற்பான் அவர்கள் அங்கு கொடுப்பதை சாப்பிடுவான்.. மதியம் பாதிரியார் அவனுக்கும் சேர்த்து சாப்பாடு எடுத்து வைப்பார். தூக்கம் வந்தால் எந்த இடமென்று பாராமல் அங்கேயே படுத்து தூங்கி விடுவான். அவனுக்கு வானமே கூரை. உடைகளை பார்த்து இவன் மனநலம் குன்றியவன் என்று யாரும் சொல்ல முடியாது. அவ்வளவு சுத்தம். தினமும் துவைத்த துணிகளையே உடுத்துவான். குளக்கரையில் இருக்கும் கிணற்றில் குளித்து முடித்து, அர்ச்சகருக்கு குடம் குடமாக தண்ணீர் எடுத்து தருவான். ஆனால் பிராகாரத்திற்குள் போகமாட்டான். பிரார்த்தனையும் செய்ய மாட்டான். பின்னே மணி எதற்கு அடிக்கிறான்? அடித்தால் சத்தம் வருமே, அந்த சத்தத்தில் களிப்பான். ஆனந்த கூத்தாடுவான்.சில நாட்களில் அவன் விரக்தியான மனநிலையில் இருப்பான். அழுதுகொண்டே மணி அடிப்பான். வேகமாக அடிப்பான். பார்ப்பவர்களுக்கு பயமாக இருக்கும். கதறி அழுவான். மணி அடித்தபடியே அங்கேயே மயக்கமுற்று விழுந்துவிடுவான். அர்ச்சகரோ, பாதிரியாரோ அவன் மீது தண்ணீர் தெளித்து அவனை எழுப்பி உண்பதற்கு ஏதேனும் தருவார்கள்.

ஊர் குழந்தைகளுக்கு இவனை கண்டால் பாதி பயம், பாதி சந்தோசம். இவனுக்கு சலாம் போட்டால் திரும்ப சலாம் போடுவான். "காலை வணக்கம்" என்றால் "காலை வணக்கம்" என்று இருகரம் கூப்பி வணக்கம் சொல்வான். பத்து முறை வணக்கம் சொன்னாலும், எந்த எரிச்சலும் படாமல் மீண்டும் மீண்டும் வணக்கம் தெரிவிப்பான். அதுவும் அவன் நீண்ட தாடியுடன் வணக்கம் சொல்வது ஏதோ ஒரு யோகி வணங்குவது போல் இருக்கும். பல வருடங்களாக வளரும் தாடி.சாப்பிடும் போது சாப்பாட்டு எச்சங்கள் சில சமயம் ஒட்டிக்கொண்டு அசிங்கமாக காட்சி தரும். அவன் சாப்பிடுவதை பார்க்க அருவருப்பாக இருக்கும். நாகரீகம் இல்லாமல் சாப்பிடுவான். சாம்பார், ரசம், பொரியல், மோர், தயிர் என்று அனைத்தையும் ஒன்றாக குழைத்து சாப்பிடுவான்.


அவன் ஏன் இப்படி ஆனான் என்று யாரும் கேட்டதும் இல்லை. இவனும் கவலைப்பட்டதில்லை. அவனுக்கு என்ன தெரியும் கவலைகொள்ள? பாதிரியார் சில சமயம் அவனை பற்றி கேட்பார். அர்ச்சகரும் கேட்பார். அவனுக்கு எதுவும் நினைவில் இல்லை, தன் பேர் இந்திரன் என்பது மட்டும் நினைவில் இருந்தது.மற்ற விடயம் ஒன்றும் நினைவில் இல்லை. தான் திருமணம் ஆனவனா? தந்தை தாயார் யார், எந்த ஊர், என்ன படித்தான், நண்பர்கள் எங்கே? ஒரு கேள்விக்கும் விடை கிடைக்கவேயில்லை.

ஒரு நாள் எல்லாவற்றிற்கும் விடைக் கிடைத்தது. அந்த விடை கிடைத்தபோது விடை கிடைக்காமலே இருந்திருக்கலாம் என்று தோன்றியது. நடுநிசியில் யாரோ எழுப்பக் கண்டான். அவனை சுற்றி பத்து இருபது பேர். அவன் எங்கு தூங்கி கொண்டிருந்தான் என்பது நினைவில் இல்லை. ஊருக்கு வெளியே இருந்த ஆலமரத்தின் அடியில் அனைத்தும் நடந்தது. அத்தனை பேரின் கையிலும் தடி, பொல்லு வெட்டரிவாள்கள் இருந்தன.

"உன் பேர் என்ன?". பதறினான்.ஏதும் பேசவில்லை. "கேட்கிறோம் இல்லை. உன் பேர் என்ன? சொல்லுடா". குரல்களில் கலவரம் தெரிந்தது. "அவன் வேட்டியை கழட்டி பாருங்க. அவனை என்ன கேட்பது".

இந்திரனுக்கு லேசாக பழைய நினைவுகள் வந்தது. சில ஆண்டுகள் முன்னர் அவனுடைய குடும்பம், நண்பர்கள் அனைவரும் பக்கத்து ஊரில் நடந்த திருவிழாவிற்கு சென்று இரவு வந்து கொண்டிருந்தனர். இதேபோல் பலர் தடி, பொல்லு கத்தியுடன் இவர்கள் வந்த வண்டியை நோக்கி வந்தனர். இவன் ஓடி மரத்தின் ஓரத்தில் ஒளிந்து கொண்டான். இவன் கண் முன்னே, இவனது குடும்பம், நண்பர்கள் அனைவரும் கொடூரமாக வெட்டி சாய்க்கப்பட்டனர். ஏதோ இனக்கலவரமாம். பழைய நினைவுகள் மீண்டும் வர அதிர்ச்சியுற்று கதறினான்.

பதறும். அப்பா அம்மா குடும்பம் முழுவது கண் முன்னே பிரிந்ததற்கு இப்போது தான் அழுகின்றான். அழமுடியவில்லை. சக்தி இல்லை. இவன் உடல் முழுவதும் இரத்த காயங்கள். கழுத்து வெட்டுப்பட்டு இருந்தது. உயிர் கொஞ்சம் கொஞ்சமாக பிரிந்து கொண்டிருந்தது. "பாதர் என் ஊரு நினைவிற்கு வந்துவிட்டது, என் அப்பா அம்மா கிட்ட போகிறேன். சாமி என் நண்பர்கள் என் பக்கத்தில் இருக்கிறார்கள். அவர்களை பார்க்கபோகிறேன்" அழுதபடி, குரல் உடைந்து.. அவன் உயிர் பிரிந்தது.



ஆக்கம்: விழியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ அமிர்தம் நெய்

2000 ஆண்டுகளுக்கு முன்பே சித்த ஆயுர்வேத மருத்துவத்தில் நெய்யின் பயன்பாடு அதிகம் இருந்து வந்துள்ளது. மருத்துவக் குணம் வாய்ந்த மூலிகைகளில் உள்ள அணுக்களின் சுவர்களை ஊடுருவக்கூடிய தன்மை நெய்க்கு இருப்பதால் இத்தகைய மருந்து தயாரிப்பில் நெய்யை அதிகம் பயன்படுத்துகின்றனர். ஒரு ஸ்பூன் நெய்யில் 14 கிராம் கொழுப்பு சத்துக்கள் நிறைந்துள்ளது.

**ஜீரண சக்தியைத் தூண்ட**

நெய் வயிற்றில் உள்ள அமிலத்தன்மையை சமன் செய்து வயிறு மற்றும் குடல் பகுதியில் உள்ள மியூகஸ் லையனிங் பகுதியை வலுவாக்குகிறது.நெய்யில் உப்பு, லேக்டோஸ் போன்ற சத்துக்கள் கிடையாது. நெய் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. கன்சர், வைரல் நோய்களை தடுக்கிறது. நெய்யில் CLA - Conjulated Linoleic Acid உள்ளது. இது உடல் பருமனாவதைத் தடுக்கிறது. அதுபோல் ஒமேகா 3 என்ற கொழுப்பு அமிலம் நெய்யில் உள்ளதாக அண்மையில் கண்டறிந்துள்ளனர்.

**இது மூளைக்கு சிறந்த டானிக்**

நெய்யில் Saturated fat - 65%
Mono - unsaturated fat - 32%
Linoleic - unsaturated fat -3%

இத்தகைய மருத்துவக் குணம் வாய்ந்த நெய்யை உணவில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை அறிந்துகொள்வோம்.

அதாவது நெய்யை நன்கு உருக்கி சுடு சாதத்தில் சேர்த்து கலந்து சாப்பிட வேண்டும். நெய்யை உருக்கி சாப்பிடுவதால் உடலுக்கு குளிர்ச்சியைக் கொடுத்து உஷ்ணத்தைத் தணிக்கும்.

தோசை வார்க்கும் போது எண்ணைய்க்கு பதிலாக நெய் சேர்த்துக் கொள்ளலாம். நெய் சேர்த்த பட்சணங்களை உண்ணலாம். மலச்சிக்கலைப் போக்கும். வாத, பித்த, கபத்தின் சீற்றங்களைக் குறைத்து அதனதன் நிலையில் நிறுத்தி நோய்களின் தாக்கத்தைத் தடுக்கும்.

* ஞாபக சக்தியை தூண்டும்
* சரும பளபளப்பைக் கொடுக்கும்
* கண் நரம்புகளைப் பலப்படுத்தி கண் பார்வை தெளிவடையச் செய்யும்.

**உடல் வலுவடைய**

சிலர் எப்போதும் சோர்வுடன் உடல் வலுவில்லாமல் காணப்படுவார்கள். சிறிது தூரம் நடந்தால்கூட அவர்களுக்கு மேல் மூச்சு வாங்கும். உடனே அமர்ந்து விடுவார்கள். கால்கள் அதிகமாக வலிப்பதாகக் கூறுவார்கள். இதற்கு காரணம் உடலில் சத்தின்மையே..

இவர்கள் தினமும் மதிய உணவில் நெய்யை சேர்த்து வந்தால் உடலுக்குத் தேவையான சத்துக்கள் கிடைக்கும்.


**குடற்புண் குணமாக**

குடற்புண் (அல்சர்) கொண்டவர்கள் பசியின்மையால் அவதியுறுவார்கள். சரியான நேரத்திற்கு உணவு சாப்பிடாமலும் அதிக பட்டினியாகவும் இருப்பவர்களின் வயிற்றில் ஜீரண அமிலங்கள் சுரந்து குடலின் உட்புறச் சுவர்களை புண்ணாக்கி விடுகின்றன. மேலும் வாயுக் கோளாறு உள்ளவர்களுக்கும் உணவில் அதிக காரம் சேர்த்துக் கொள்பவர்களுக்கும் மது போன்ற போதை வஸ்துக்கள் உபயோகிப்பவர்களுக்கும்மன அழுத்தம் கொண்டவர்களுக்கும் குடல் புண்ணாகிவிடும். இதனால் வாயிலும் புண்கள் உருவாகி, ஒருவித நாற்றம் வீசும்.இவர்கள் உணவில் நெய் சேர்த்து சாப்பிட்டு வந்தால் குடலின் உட்புறச் சுவர்களில் உள்ள புண்கள் ஆறுவதுடன், சுரப்பிகள் பலப்படும். மலச்சிக்கல் நீங்கும். நன்கு ஜீரண சக்தியைத் தூண்டும்.





# எது சாபம்



அந்தக் காலத்தில் முனிவர்களில் பலர் சாபம் கொடுப்பவர்களாக இருந்தார்கள் என நாம் எமது இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம்.

இந்தச் சாபத்துக்கு அரசன் முதல் ஆண்டி வரை அஞ்சி நடுங்கியதாக அறிந்திருக்கிறோம்.

சாபம் என்பது என்ன? அதற்கு ஏன் பயப்பட வேண்டும்? இந்தக் கேள்விகளை பெரியவர்களிடம் கேட்டால்....

வல்லவர்களை, பத்திமான்களை, தவத்தில் உயர்ந்தவர்களை கோபம் அடையச் செய்தால், அவர்கள் கோபம் கொண்டு சொல்லுகின்ற வார்த்தைகள் அப்படியே பலித்துவிடும். அது தான் சாபம் என்று விளக்கம் தருவார்கள்.

இந்த விளக்கம் சரியானது போல் தோன்றினாலும் மனதளவில் முழுமையானதாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

காரணம் பக்திமான்கள், தவஞானிகள் மனதை அடக்கியவர்கள் இச்சைகளைத் துறந்தவர்கள். மனம் அடங்கினால் காம குரோத எண்ணங்கள் தானாக அடங்கிவிடும்.

நிலை இப்படியிருக்கும்போது அவர்களுக்கு கோபம் வருகிறது என்றால் அவர்களை எப்படி ஆன்மிகத்தில் உயர்ந்தவர்களாக கருத முடியும்?

எனவே பெரியோர்கள் சொல்லும் விளக்கப்படி அவர்களை கோபம் கொள்ளச் செய்தால் சாபம் கிடைக்கும் என்பது தவறான கருத்தாக இருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகின்றது அல்லவா?

இந் நிலையில் சாபம் என்பதற்கும் - கோபம் என்பதற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றே நாம் கருதவேண்டியுள்ளது.

இவ்வாறாயின் இந்த சாபம் என்பது என்ன? அதன் உள்ளார்ந்த தன்மைகள் என்ன? அதன் வெளிப்பாடு எத்தகையது?

அதனை நாம் அறிய வேண்டாமா?

செப்டெம்பர் தினமகுடி மாத இதழைப் படியுங்கள் இதற்கான விடை உங்கள் வசம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### மேடம்

இந்த மாதத்தில் செலவுகளுக்குப் பஞ்சம் இராது. திரும்பிய பக்கமெல்லாம் செலவுகள் தான். ஆனால் அதற்காக நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனென்றால் எல்லா செலவுகளையும் சமாளிக்கும் அளவிற்கு எங்கிருந்தாவது பணம் கைக்கு வந்து விடும்.



### இடபம்

தொழில் வியாபாரம் சுறுசுறுப்பாக நடைபெறும். கூட்டு வியாபாரத்தில் இருந்து வந்த கருத்து வேற்றுமை விலகும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிட்டும். கலைத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் தேடி வரும். உங்கள் வருமானம் இரண்டு மடங்காக உயரும்.



### மிதுனம்

இம்மாதத்தில் சுக சௌகரிய வசதிகளை அபிவிருத்தி செய்து கொள்ள வருமான வரவுகள் ஒத்துழைக்கும். வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் சிரமம் இராது.



### கடகம்

இம்மாதத்தில் கையில் பண நடமாட்டம் தாராளமாகக் காணப்படும். இப்போது உங்களிடம் ஒருவித வேகம் தெரியும். அந்த வேகத்துடன் செயல்பட்டு நின்று போன வேலைகளையும் செய்து முடிப்பீர்கள். ஓரளவு ஆதாயத்தையும் தேடிக் கொள்வீர்கள்.



### சிம்மம்

இம்மாதத்தில் தொழில் வியாபாரத்தில் புதிய உத்திகளைக் கடைப்பிடித்தால் விற்பனை அதிகரிக்கும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு வேலைப் பளு குறையும். அலுவலகத்தில் சில சலுகைகள் கிடைக்கும். தொழிலாளர்களின் வருமானம் பெருகும். இடமாற்றம் ஏற்படும்



### கன்னி

இம்மாதத்தில் தொழில் வியாபாரத்தில் புதிதாகச் சில நெருக்கடிகள் தோன்றும். பொறுமையாகச் சமாளிக்க வேண்டும். இம்மாதத்தைப் பொறுத்த வரை கடமையை செய் பலனை எதிர்பார்க்காதே என்ற வரிக்கு ஏற்ப தாங்கள் செயல்பட வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றீர்கள்.



ஜோதிடம்
ஜூன் 14 முதல் ஜூலை 14 வரை



### துலாம்

இந்த மாதத்தில் வெற்றியை மட்டுமே எதிர்பார்க்க கூடாது.. பண வரவு திருப்திகரமாக இருந்தாலும் கொடுக்கல் வாங்கலில் குழப்பமும் குளறுபடிகளும் காணப்படும். நீங்கள் நினைப்பது போல் எதுவும் நடக்காது. . மனதிலும் எப்போதும் குழப்பம் நிறைந்திருக்கும். அதனால் உங்களால் தெளிவாகச் சிந்திக்க முடியாது. முடிவு எடுப்பதில் தடுமாற்றம் ஏற்படும்.



### விருச்சிகம்

இந்த மாதத்தில் நாவடக்கம் தேவை. யாரிடம் பேசினாலும் அவர்களுக்கு உரிய மரியாதை கொடுக்க வேண்டும். வாக்கு வாதங்கள் ஏற்படலாம். அதில் தவறில்லை. வேலைவாய்ப்புகளில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் உண்டாகும். அலைச்சல்களும் செலவுகளும் அதிகரிக்கும். வெளி வட்டாரங்களில் உங்களுக்குச் சாதகமான போக்கு ஏற்படாது.



### தனுசு

இம்மாதத்தில் வருமானம் தொடர்பான அனைத்துச் செயல்களிலும் தேக்கம்,தடை, தாமதம், தடங்கல் போன்றவை ஏற்படும். கைக்கு பணம் வருவது குறைவாகவும் உங்களுக்கு ஏற்படும் செலவுகள் அதிகமாகவும் இருக்கும். சில விரயங்களும் ஏற்படும். இம்மாதத்தைப் பொறுத்த வரை நல்லதும் கெட்டதும் கலந்த பலனாக இருக்கும்



### மகரம்

இம் மாதத்தைப் பொறுத்தவரை மீண்டும் புகழின் உச்சிக்கு செல்ல அடி எடுத்து வைக்க இருக்கின்றீர்கள். தங்களின் மதிப்பு, மரியாதை, கௌரவத்தை தக்க வைத்துக் கொள்ள கடமையே கண்ணாக செயல்பட இருக்கின்றீர்கள். உங்கள் உழைப்பிற்கு உரிய பலன் நிச்சயம் உண்டு



### கும்பம்

இம்மாதத்தில் திடீர்ச் செலவுகளைச் சமாளிக்க கடன் வாங்குவீர்கள். ஆனால் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாது. பழைய கடன்களும் அவ்வப்போது தொல்லை கொடுக்கும். ஆனால் நீங்கள் எதற்காகவும் கவலைப்பட வேண்டியதில்லை. இம்மாதத்தைப் பொறுத்தவரை பெரும் சிக்கலில் இருந்து தப்பி வந்தவர் போல இருப்பீர்கள்



### மீனம்

இம்மாதத்தில் தொழில், வியாபாரத்தில் மந்தமான போக்கு காணப்படும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கும். . குறிப்பாக வெளி இடங்களுக்கோ வெளியூர் பயணங்களிலோ முன்பின் தெரியாத வரை நம்பி எந்தவிதமான செயலிலும் ஈடுபட வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்படத்துறை குறித்து அறியவிரும்புவோருக்காக...

# கேமரா கோணம் என்பது என்ன?

திரைப்படம் என்பது காட்சிகளால் ஆனது காட்சிகளை ஒருங்கிணைத்தால் திரைப்படம் உருவாகி விடும் என நாம் நம்புகிறோம். ஆனால் ஒரு திரைப்படம் என்பது பல துண்டு ஷொட்ஸ்"(shots)-களால் ஆனது. பல ஷொட்சுகள் கோர்வையாக இணைக்கப்பட்டு, அதன் தொடர்ச்சியான தன்மையில் கதை சொல்லப்படுகிறது. ஒவ்வொரு ஷொட்டும் சரியான கோணத்தில் படமாக்கப்படவேண்டும். அதாவது அந்த ஷொட்டில் நடிக்கும் நடிகனை, அவன் செயலை பார்வையாளன் சரியாகப் பார்க்கத் தேவையான கோணத்தில் கேமரா வைத்துப் படமாக்கப்பட வேண்டும். கேமராக் கோணத்தைத் தீர்மானிப்பதில் பல காரணிகள் உள்ளன. குறிப்பாக அந்தக் கதையின் தன்மை, அதன் தேவை ஆகியவற்றைப் பொறுத்தே கேமராக் கோணம் அமைக்கப்படவேண்டும். இரண்டு முக்கிய தேவையை கேமராக் கோணம் அமைத்தலில் நாம் பூர்த்தி செய்யவேண்டும். அந்தக் காட்சியைப் பார்வையாளன் பார்க்க சரியான "பார்வைக் கோணம் (View Point) மற்றும் எவ்வளவு "பரப்பளவை" (Area Covered) அந்த ஷொட் காட்டப்போகிறது என்பது. ஒவ்வொரு தடவையும் கேமரா இடம் மாறும்போதும் இந்த இரண்டு கேள்விகளுக்கும் விடை தேடவேண்டும்.

இதிலிருந்து நாம் முடிவுக்கு வரவேண்டியது, "கேமராக் கோணம்" என்பது ஒரு காட்சியை பார்வையாளன் சரியான இடத்திலிருந்து (best view-point) பார்க்க அனுமதிப்பதும், எந்த அளவு பரப்பளவைப் (How much area) பார்க்கிறான் என்பதையும் தீர்மானிப்பதும் எனக் கொள்ளலாம்கவன-மாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட "கேமராக் கோணம்" கதையில் பார்வையாளனை ஈடுபாடு கொள்ளவைக்கிறது, அதுவே கவனக்குறைவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட "கேமராக் கோணம்" பார்வையாளனை கதையிலிருந்து அன்னியப்படுத்துகிறது, ஏனெனில் திரையில் நடக்கும் செயலை அவன் சரியாகப் பார்க்க முடியாத போது, என்ன நடக்கிறது என்பது சரியாகத் தெரியாதால் கதையோட்டதில் ஆர்வம் குறைந்து அவனை எரிச்சல் அடையச்செய்கிறது. ஆகவே ஒரு ஷொட்டை வடிவமைக்கும்போது சரியான "கேமராக் கோணத்தைத்" தேர்ந்தெடுப்பது முக்கியமாகி றது.



சில திரைக்கதைகள் அதற்குத் தேவையான கேமராக் கோணத்தைத் தீர்மானித்தாலும், இயக்குனர் படம் எடுக்கும் போது தமக்குத் தேவையான கோணத்தைத் தீர்மானித்துக்கொள்ள முடியும். ஒளிப்பதிவாளர் கதை மற்றும் இயக்குனரின் ஆலோசனையுடன் "கேமராக் கோணத்தைத் தேர்ந்தெடுக்கிறார். பெரும்பான்மையான இயக்குனர்கள் அதை ஒளிப்பதிவாளரின் பொறுப்பில் விட்டு விடுவது உண்டு. சில இயக்குனர்கள் திரைப்படம் எடுக்க தளத்திற்குச் செல்லுவதிற்கு முன்பாகவே, ஒளிப்பதிவாளர் மற்றும் கலை இயக்குனர் ஆலோசனையுடன் 'story board' வரைந்து கொண்டு தங்களின் கேமராக் கோணத்தைத் தீர்மானிக்கிறார்கள்.

திரையில் ஓடும் கதை என்பது தொடர்ச்சியாக மாறும் பிம்பங்களைஃகாட்சிகளை வெவ்வேறு கோணத்திலிருந்து காட்டுவதாகும். அதாவது காட்சியின் தன்மைக்கேற்ப பார்வையாளனை நடிகனின் அருகில் (close-up) இருந்து பார்ப்பதிற்கும், தூரத்தில் நிறுத்தி ஒரு புல்வெளியை (Landscape) முழுமையாகப் பார்க்க ஏதுவாகவும் கேமராக் கோணத்தைத் தீர்மானிக்கலாம். அதேபோல் ஒரு உயர்ந்த மாடியிலிருந்து கீழ் நோக்கிய கேமராக் கோணத்தால் (Top Angle) அந்த மாடியின் உயரத்தைக்கண்டு மலைக்கவைப்பதும், அண்ணார்ந்து பார்த்து வியக்க மேல் நேக்கிய கேமராக் கோணத்தையும் (Low Angle) பயன்படுத்தலாம். அதே போல் குதிரையில் பயணப்படும் குதிரையோட்டியின் இடத்தில் கேமராவைப் பொருத்தி அதன் வேகத்தையும் சாகாசத்தையும் உணரவைக்கலாம். மேலும் ஒரு நுண்ணிய கிருமியின் செயல்பாட்டை "மைக்ரோஸ்கோப்" மூலமும், பூமின் சுழற்சியை செயற்கைக் கோளிலிருந்தும் காட்டலாம். ஒரு பார்வையாளனை எதைவேண்டுமானாலும் (any-thing) எங்கிருந்து (anywhere) வேண்டுமானாலும் எந்தக் கோணத்திலும் (any angle) உடனுக்குடன் (in-stantly) பார்க்கவைக்க முடியும். ஒளிப்பதிவாளர் மற்றும் "எடிட்டர்" (Editor) துணைகொண்டு திரைப்படத்தில் இதை சாத்தியப்படுத்த முடியும். இதுவே திரைப்படத்தின் மிகப் பெரிய பலம். ஆகவேதான் சரியான "கேமராக் கோணத்தைத்" தேர்ந்தெடுப்பது அதிமுக்கியமாகிறது.

அதற்கு முன்பாக நாம் முக்கியமான மூன்று விடயங்களைப் பார்த்துவிடுவோம்.

சீன் : Scene

ஒரு சீன் என்பது அந்தக் காட்சி நடக்கும் இடம் அல்லது தளத்தைக் குறிப்பது. ஒரு காட்சி என்பது ஒரு சீனாகவோ (Scene) அல்லது பல சீனாகவோ பிரிக்கப்பட்டிருக்கும். அதே போல் ஒரு சீன் என்பது ஒரு ஷொட்டாகவோ (shot) அல்லது பல ஷாட்டாகவோ காட்சியின் தொடர்ச்சியைப் பொறுத்துப் பிரிக்கப் பட்டிருக்கும்.

ஷொட்: shot

ஒரு ஷொட் என்பது கேமராவைக் கொண்டு எந்த வித இடை நிறுத்தமும் இல்லாமல் தொடர்ச்சியான பார்வைக்கு படம் பிடிக்கப்படும் ஒரு காட்சி துண்டு. (a continuous view filmed by one camera without interruption)

அதாவது ஒரு காட்சியைப் படம் பிடிக்க கேமராவைத் துவக்கியதிலிருந்து நிறுத்தும் வரைக்கும் இடைப்பட்ட காட்சித் துண்டை ஒரு ஷொட் என்கிறோம்.

ஒவ்வொரு ஷொட்டும் ஒரு டேக் (take) என்கிறோம். அதே செயலை எந்த வித மாறுதலும் இல்லாமல், தொழில்நுட்பத் தவறினாலோ அல்லது சிறப்பாக இருப்பதிற்காகவோ மீண்டும் எடுத்தால் அதற்கு Re-take என்று பெயர்.

கேமராவின் கோணத்தையோ, லென்சையோ அல்லது காட்சியின் தொடர்ச்சியையோ மாற்றி எடுத்தால் அது Re-take ஆகாது. அது ஒரு புது ஷாட் (New shot) என அழைக்கப்படும்.

சீக்வன்ஸ்: sequence

சீக்வன்ஸ் என்பது ஒரு முழுமையடைந்த தொடர்ச்சியான சீன்களின் தொகுப்பு அல்லது தொடர்ச்சியான ஷாட்களின் தொகுப்பு (series of scenes- or shots- complete in itself) எனலாம்ஒரு சீக்வன்ஸ் என்பது ஒரே இடத்திலே முடியலாம். அல்லது அந்தக் காட்சிக்குத் தகுந்த மாதிரி வெவ்வேறு இடங்களிலும் இருக்கலாம். அதாவது ஒரு நடிகன் வீட்டின் முன்புறத்திலிருந்து வீட்டிற்குள் சென்று சமையல் அறையில் இருக்கும் மனைவியிடம் பேசுவது வரை இருக்கிறது என்றால் இந்தக் காட்சி வெவ்வேறு இடத்தில் நிகழ்கிறது என்றாலும் இது ஒரு சீக்வன்ஸ் என அழைக்கப்படும்.

அதேபோல் ஒரு சீக்வன்ஸ் எடிட்டிங்கின் போது நேரடியாக 'cut shot'-ஆக எடிட் செய்திருக்கலாம். அல்லது fade or dissolve உபயோகித்து எடிட் செய்திருக்கலாம்.


பொதுவாக சீன் (scene) மற்றும் ஷாட் (shots)-வார்த்தையை மாற்றி உபயோகிக்கும் போது குழப்பம் வருகிறது. பொதுவாக ஒரு சீன் என்பது பல ஷொட்டுக-ளாகப் பிரிக்கப்படுகிறது. சீனுக்கு ஒரு எண்ணும் அதில் வரும் ஷொட்டுக்கு ஒரு எண்ணும் கொடுத்து அடையாளப்படுத்துகிறார்கள். அதாவது ஐந்தாவது சீன், இரண்டாவது ஷொட், முதலாவது take என்றால்..5/2/1 என அடையாளப்படுத்துவார்கள்.

சில திரைக்கதையில் ஒரு ஷொட்டே ஒரு சீனாக இருக்கிறது. இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் அந்த ஒரு ஷாட் சீனுக்கு a-b-c-d.. என்று எழுத்தால் (letters) அடையாளப்படுத்தப்படுகிறது. இங்கே ஒரு ஷொட்டே ஒரு சீனாக இருக்கிறது. ஒரு சீன் என்பது ஒரே ஒரு ஷொட்டாவும் இருக்கிறது. இந்த இடங்களில் வரும் குழப்பத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டால் சீன், ஷொட் வார்த்தையை சரியாகப் பயன்படுத்தலாம்.

ஒரு ஷொட்டையோ அல்லது ஷொட்டின் துண்டிக்கப்பட்ட ஒரு பகுதியையோ ஒரு கட் (cut) என்கிறோம். சில சமயங்களில் ஒரு ஷொட்டிலிருந்து சில பகுதியைத் துண்டித்து மற்றொரு ஷொட்டாகப் பயன்படுத்துவார்கள். அதாவது ஒரு நடிகனின் சிரிக்கும் பகுதியை அவனின் பேச்சோடு இணைந்திருந்ததலிருந்து பிரித்தெடுத்து மற்ற நடிகனின் செயலுக்கு அப்புறம் பயன்படுத்துவார்கள்.

அடுத்து கேமராக் கோணங்களின் வகைகளைப் பற்றித் தெரிந்துகொள்ளலாம். அது அடுத்த கட்டுரையில்..

இக் கட்டுரை, தேங்கிக் கிடக்கும் நம் நாட்டு தமிழ் திரைப்படத்துறையின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு பிரசுரமாகிறது. தொடர்ந்து இதனை படிப்பதோடு இது குறித்த உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நீச்சல் வீரன் எதிர் நீச்சல் போடுகிறான்

சந்திப்பு- வை.கஜேந்திரன்






தினமகுடியின் இளம் சாதனையாளர்கள் தேடலின்போது எமது பார்வையில் "வெற்றி வேண்டுமா போட்டு பாருடா எதிர் நீச்சல்" என்ற பாடல் வரிக்கேற்ப நீச்சல் வீரன் சிறுவன் ஜெய்சங்கர் ஹக்ஷன் சிக்கினான் இவனை சந்திப்பதற்காக அவரது இல்லத்தில் தினமகுடி குழுவினர் சென்ற போது...

**உங்களைப்பற்றி-** எனது பெயர் ஹக்ஷன் அப்பா ஜெய்சங்கர், அம்மா சிவகுமாரி, தங்கை ஹர்ஷா நான் விவேகானந்தா கல்லூரியில் தரம் 3இல் கல்வி கற்கிறேன்.

**நீச்சல் போட்டியில் இரண்டு தங்க பதக்கங்களை இந்தச் சிறுவயதில் பெற்றுள்ளீர்கள் அதுபற்றி...**

முதலில் சுகததாச நீச்சல் தடாகத்தில் தினமும் 3மணி முதல் மாலை 6மணி வரை பயிற்சியில் ஈடுபட்டேன் மிகவும் கஷ்டமாகத்தான் இருந்தது. இப்போது இலகுவாக உள்ளது. இதற்கு எனது பெற்றோர் பயிற்சி ஆசிரியர் சிறாஜ் மற்றும் என் சக மாணவர்கள் கல்லூரி அதிபர் ஆசிரியர்கள் என்னை பாராட்டியதோடு உற்சாகம் ஊட்டுகின்றனர் இறையாசியோடு இன்னும் பல பதக்கங்களை பெறுவேன் என சிரித்தவாறே சொன்னான.

**இவனிடம் நீச்சல் திறமை இருப்பதை எவ்வாறு தெரிந்து கொண்டீர்கள் என அவனது பெற்றோர்களிடம் கேட்டபோது...**

ஒரு நாள் அப்பா, நான் நீச்சல் பழக போறேன் என்றான். பிள்ளைகளின் விருப்பம் தானே எங்களைப் போன்ற பெற்றோர்களின் விருப்பம் அவனின் விருப்பப்படியே சுகததாச நீச்சல் பயிச்சிக் கூடத்தில் உறுப்பினராக இணைத்து விட்டேன். முதலில் சிரமப்பட்டவன் பிறகு தானே விரும்பி பயிற்சியில் ஈடுபட்டான் பயிற்சியாளரின் பாராட்டோடு பிறகென்ன தொடர்ச்சியான பயிற்சியும் விடாமுயற்சியும் தான் படிக்கட்டுகள் அதில் இப்போது ஏற ஆரம்பித்திருக்கிறான்.

**உங்கள் மகனின் சாதனைகள் பற்றி...**

இதுவரை மூன்று முதலிடங்களையும் இரண்டு முறை இரண்டாம் இடத்தினையும் ஒரு முறை மூன்றாம் இடத்தையும் பல முறை நீச்சல் போட்டிகளில் கலந்திருக்கிறான் முதன் முதலில் அம்பலாங்கொடையில் 45 பாடசாலையினைச்சேர்ந்த 96 வீரர்கள் பங்கு பற்றிய போட்டியில் முதல் தடவையே 5 இடங்களைப் பெற்றான் ஆனால் மூன்று மட்டுமே தகுதியானது. மற்ற இரண்டும் தகுதியற்றது என அறிவித்தார்கள் மனம் உடைந்து போனது காரணம் அங்கிருந்த அனைவரின் வாயிலும் எனது மகனுக்கோ 5 போட்டிகளிலும் முதலாம் இடமும் என எண்ணியிருந்தார்கள் அது ஏமாற்றம் தரவே அவர்களும் ஏற்பாட்டு குழுவினரோடு வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர் அப்போதுதான் எனது மகனுக்கு இவ்வளவு ரசிகர்கள் இருக்கிறார்கள் என்று உணர்ந்தேன் நானும் மகனின் பயிற்சியாசிரியரும் போராடினோம். பலன் இல்லை காரணம் இரண்டு விடையங்களே ஒன்று எனது மகன் தமிழன் இரண்டாவது விவேகானந்தா பாடசாலை. பெரும்பான்மையினத்தவரின் முணுமுணுப்பு இது யுத்தம் முடிந்த பின்பும் இன்னும் இனம் மொழி துவேஷங்கள் உயர் பதவிகளில் இருப்பவர்களிடம் உள்ளத்தில் ஊறிப்போயுள்ளது இதற்கு துணையாக சில நல்ல தமிழ் உள்ளங்களும் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

**தற்போது கிடைத்த பதக்கம் இரண்டு பற்றி-**

கொழும்பு மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி நீச்சல் தடாகத்தில் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான எட்டு வயதுக்கு உட்பட்டோருக்கான சம்பியன்ஷிப்- 2012 நீச்சல் போட்டியில் ஹக்ஷன் தனது அதித திறமையினை வெளிப்படுத்தி 25மீற்றர் வண்ணத்துப்பூச்சி (பட்டர்ப்ளை) போட்டியை 22.44 செக்கன்களிலும் 25மீற்றர் மார்தட்டு நீச்சல் (ப்றேஸ்ட்ஸ்ரோக்) போட்டியில் 26.23 செக்கன்களில் இலக்கை அடைந்து இரண்டு தங்கப்பதக்கங்களை தனதாக்கி கொண்டான். இங்கேயும் அதே துவேஷம் தான் நிறைவேற்றப்பட்டது. காரணம் இலங்கையிலே நீச்சலில் சம்பியன்ஷிப்பாக வரும் பாடசாலைகள் ஆனந்தா, நாலந்தா, தேர்ஸடன் (மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி)கள் மட்டுமே தரமான பாடசாலைகள் தரமான பயிற்சி தடாகங்கள் கொண்ட 96 பாடசாலை மாணவர்களோடு போட்டி போட்டு சாதிப்பது என்பது கடினமே இருப்பினும் மூன்று தங்கப் பதக்கங்களை பெறவேண்டிய எனது மகன் ஒன்றை இழந்து விட்டான் காரணம் .

அன்று சுகயீனம் இயலாது இருந்தும் மூன்று போட்டியிலும் பங்கு பற்றியிருந்தான் மூன்றுக்கும் தங்கப்பதக்கம் கொடுத்துவிட்டால் சம்பியன்ஷிப் ஆகிவிடுவான் தமிழன் என்ற காரணத்தினால் கொடுக்கவில்லை சுகயீனத்தை காரணம் காட்டினார்கள் நாங்களும் ஏற்றுக்கொண்டோம். எதுவுமே பேச இயலாதவர்களாய்.

**பாடசாலையினதும் சமூகத்தினதும் வரவேற்பு எவ்வாறு இருந்தது...**

விவேகானந்தா பாடசாலை வரலாற்றில் 8 வயதுக்குட்பட்டோரின் நீச்சல் போட்டியில் தங்கபதக்கம் இதுதான் முதல் தடைவ என்றால் பெருமைப்பட வேண்டிய விடையமல்லவா? பெருமை கொண்டார்கள் அவ்வளவுதான். அந்த நேரத்தில் பெயர் போட்டுக் கொள்ள விரும்புகிறார்களே தவிர அதற்கான தகுந்த பயிற்சி முறையான வழிமுறைகள் செய்து கொடுப்பதில்லை இதற்கு உதாரணம்தான் தேசிய நீச்சல் சாதனை வீரர் பட்டியலில் ஹக்ஷனின் பெயர் சேர்க்கப்படவில்லை அதற்கான முயற்சியினை பாடசாலை எடுத்திருக்கலாம். ஆனால் செய்யவில்லை.

**மகனின் நீச்சல் சாதனையில் உச்சம் எதுவென நினைக்கிறீர்கள்...**

எமக்கு மிகவும் சந்தோஷமாக உள்ளது ஆசை இல்லை பேராசை என்றுதான் சொல்ல வேண்டும் ஒலிம்பிக் போட்டியில் இலங்கை சார்பாக அதிலும் தமிழனாக ஒரு தங்கமாவது எடுக்கவேண்டும் என்பதுதான் இலட்சியம் அதற்காக வீடு வாசல் எனது சொத்துக்களை இழந்தாலும் சரி பயிற்சியுடனும் விடாமுயற்சியுடனும் செயற்பட்டு வருகிறேன் எனது மகன் ஜெயிப்பான் படைத்தவன் துணையிருப்பான்.

**நீச்சல் தவிர்ந்த ஏனைய செயற்பாடுகள் பற்றி...**

படிப்பிலும் சுட்டிதான் 35 பிள்ளைகளில் 4ஆவது பிள்ளையாக வருவான் சித்திரப்போட்டியில் முதலாம் இடம் பெற்றுள்ளான். கராத்தே-யோக மற்றும் நடன வகுப்பிற்கும் செல்கிறான் சின்ன வயதில் பழக்கினால் ஆற்றலும் அனுபவமும் கிடைக்கும் அல்லவா? நான் முன்னர் குறிப்பிட்ட பிரபலமான பாட சாலைகள் எல்லாவிதமான வசதிகளையும் செய்து தருகிறோம் மகனை எங்கள் பாடசாலையில் இணைத்துக் கொள்ளுங்கள் என்றார்கள் டாடி மம்மி என்பதை விட அப்பா, அம்மா தானே எமக்கு இனிமையானது அதுபோல புகழுக்காகவும் வசதிகளுக்காகவும் எங்கள் திறமையையும் உரிமையையும் கௌரவத்தையும் இழந்து விடக் கூடாது என்பது தன்மானத் தமிழர்களின் கொள்கையல்லவா நானும் தமிழன் தானே?

**தினமகுடி மாத இதழ் பற்றி தங்களின் கருத்து...**

எனது வாழ்க்கையில் இப்போதுதான் கேள்விப்படுகிறேன் இளம் சாதனையாளர்களை இனம் கண்டு அவர்களை வெளியுலகிற்கு கொண்டு வருவது "பசியோடு இருப்பவனுக்கு உணவழிப்பது போல" இலங்கையில் நிறையவே சிங்கள பத்திரிகைகள் சஞ்சிகைகள் வருகின்றன. ஆனால் தமிழையே உச்சரிப்பாக கொண்டு தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மாத இதழ் என்றால் என்னை பொறுத்த வரை அது தினமகுடியைத்தான் சொல்வேன். தொடர்ச்சியான வெற்றியினை பெற வாழ்த்துகிறேன்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மின்னலுக்குப் பின் இன்னல்

சினிமா வெளிச்சத்தில் ஒவ்வொரு நட்சத்திரமும் மின்னினாலும் அந்த மின்னல்களுக்குப் பின்னால் பல இன்னல்கள் ஒளிந்து கொண்டே இருக்கின்றன.

ஹொலிவுட் நடிகையும் உலகையே தன் அழகால் வசீகரித்துக் கொண்ட அழகியுமான மார்லின் மன்றோவை யாராலும் மறக்க முடியாது! இறந்து எத்தனையோ ஆண்டுகள் ஆன போதிலும் இன்றும் பலரின் கனவுக் கன்னியாகவே இருக்கிறார் அந்த கருப்பு வெள்ளை நாயகி! அந்த தேவதைக்கு உலகில் சென்ற இடமெல்லாம் சிறப்பு! ஆனால் அவருக்கோ ஏன் தான் நடிகையானோம் என்கிற வெறுப்பு!

வெளியே சிரித்து உள்ளே அழுது கொண்டிருந்தார் அந்த அழகு தேவதை!

அழகு தேவதை ஏன் உள்ளுக்குள் அழுகுணி தேவதையாக இருந்தார்?

மார்லின் மன்றோவின் உறவுக்காரப் பெண் ஒருவர் சமீபத்தில் மார்லின் பற்றி ஒரு விரிவான பேட்டி கொடுத்திருந்தார்! அந்த உறவுக்காரப் பெண் அந்த பேட்டியை கொடுக்கும்போது கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது! அது அந்தப் பெண்ணின் கண்ணீர் அல்ல.... அந்த கண்ணீரில் மார்லினின் கண்ணீரும் இருந்தது என்றே சொல்லலாம்!

'மார்லின் மிக அழகாக இருப்பதாக எல்லோரும் அவரை புகழ்வார்கள்! ஆனால் அழகாகப் பிறந்ததற்காக மார்லின் பலமுறை மனமுடைந்து அழுதிருக்கிறார்! சாதாரண குடும்பப் பெண்ணாக வாழ்வதுதான் பெரிய கொடுப்பினை! ஆனால் எனக்கு அந்த பாக்கியம் இல்லாமல் போய் விட்டதே!' என பலமுறை அவர் கவலைப்பட்டிருக்கிறார்!

செக்ஸ் என்பது ஆண்-பெண் விருப்பத்தின் பேரில் அமைவது! ஆனால் மார்லினின் விருப்பம் இல்லாமலேயே தினசரி அவர் செக்ஸ் சங்கடங்களை அனுபவித்தார்! அரசியல் வாதிகளும் சினிமாக்காரர்களும் அதிகாரவர்க்கமும் அவரை பாடாய்ப்படுத்தி விட்டது! இந்த மன உளைச்சல் காரணமாகவே தினமும் தூக்கமாத்திரை இல்லாமல் அவரால் தூங்கமுடியவில்லை! எப்போதாவது நேரம் கிடைத்தால் பாத்ரூமில் ரொம்ப நேரம் இருந்து நிம்மதியாக குளிப்பார்! அந்த குளியல்தான் அவருக்கு சந்தோசமான விடயம்! ஏன் இவ்வளவு நேரம் குளிக்கிறீர்கள்? என்று கேட்டால்.... எனக்கு விருப்பமில்லா விட்டாலும் பாவிகள் என்னை சாக்கடையில் தள்ளுகிறார்கள்! நான் அந்த சாக்கடையிலிருந்து மீள முடியாது! ஆனால் அந்த கறையை கழுவிக் கொள்வதாக நினைத்து ரொம்ப நேரம் குளிக்கிறேன் என்பாராம்

இவ்வளவு பற்றி மிஷல் மார்கன் என்பவர் எழுதியுள்ள Marilyn Monroe: Private And Undisclosed என்ற நூலில் மர்லின் மன்ரோ மீது மோகம் கொண்டு திரிந்தோர் எண்ணிக்கை எண்ணி மாள முடியாதது. ஆனால் அவருக்கோ ஆண்கள் மீது துளியும் ஈடுபாடு வரவில்லை. அவருக்கு ஆண்களுடன் உறவு கொள்வதில் பிடித்தமும் இல்லை. அதை அவரால் சரியாக செய்யவும் முடியவில்லை. மாறாக, அவர் உறவு வைத்திருந்த பெண்களிடம் பெரும் இன்பத்தை அனுபவித்தாக மன்றோவே கூறியுள்ளதாக மிகூஷல் குறிப்பிட்டுள்ளார்.


அக்காலத்தில் பிரபலமான ஜோன் கிராபோர்ட், பார்பரா ஸ்டான்விக், மெர்லின் டயட்ரிச், எலிசபெத் டெய்லர் ஆகியோருடன் மன்றோ லெஸ்பியன் உறவு வைத்திருந்ததாக அவரே ஒரு கட்டத்தில் கூறியுள்ளார். இவர்கள் போக நதாஷா லிடஸ், பாலா ஸ்டிராஸ்பெர்க் ஆகியோருடனும் அவருக்கு லெஸ்பியன் உறவு இருந்ததாம்.


மர்லின் மன்றோவின் சொந்தப் பெயர் நார்மாஜின் டென்சன். 3 முறை திருமணம் செய்தார். மூன்று முறை திருமணமாகி மூன்று முறை விவகாரத்து செய்துவிட்டார். முதல் கணவர் ஜேம்ஸ், பொலிஸ்காரர். 2ஆவது கணவர் பெயர் ஜேர்டிமாக்கியா இவர் கால்பந்து வீரர். 3ஆவது கணவர் ஆர்தர்மில்லர் சினிமா படத்தயாரிப்பாளர். அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த கென்னடிக்கும் மன்றோவுக்கும் காதல் இருந்தது என்று இருவருடைய மறைவுக்குப்பிறகு பத்திரிகைகளில் பரபரப்பான செய்திகள் வெளிவந்தன.

மன்றோவின் திருமண வாழ்க்கையின் தோல்விக்கு அவரது லெஸ்பியன் பழக்கம்தான் முக்கியக் காரணம் என்கிறார்கள். அவருக்கு ஆண்களுடனான இயற்கையான செக்ஸ் உறவு பிடிக்கவில்லையாம். மாறாக பெண்களுடன் செக்ஸ் இன்பம் காணவே அவர் பெரிதும் விரும்பினாராம். இதனால்தான் திருமண வாழக்கையில் அவரால் நிலைக்க முடியவில்லை என்கிறார்கள்.

இவ்வாறான சம்வங்கள் சில நமது தமிழ்திரை உலகிலும் நடந்தேறி வந்தன - வருகின்றன அவை குறித்து செப்டெம்பர் இதழில் பார்ப்போமே....

-திருச்சி அருள்தாஸ்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவோதய அமைப்புகளின் நிகழ்வுகள்



புலமைப் பரிசில் கருத்தரங்கிற்கு எஸ்.கே. கிருஷ்ணா வருகை தந்த போது வரவேற்கப்டுகின்றமை



புலமைப் பரிசில் கருத்தரங்கில் பங்கு பற்றிய மாணவர்களுக்கு வழிகாட்டி நூல்களை வழங்கும் போது



விவேகானந்தா மண்டபத்தில் இந்த ஆண்டு உயர்தர மாணவ மாணவிகளுக்கு உதவிதொகை வழங்கும் நிகழ்வின்போது பரிசு பெற்ற மாணவர்களுடன்



மாணவ அமைப்பு கௌரவித்தபோது



விநாயகர் கோவில் விஜயத்தின் போது







கீரகொட்டுவ மக்கள் சந்திப்பில் மாணவ, மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் போது



எஸ்.கே. கிருஷ்ணா தனது பிறந்த நாளை சிறுவர்களுடன் கொண்டாடும்போது



சுகததாச விளையாட்டு அரங்கில் ஜோசப்வாஸ் சிறுவர் பள்ளி மாணவர்களுக்கு பரிசு வழங்கிய போது



# மண்ணில் உதிர்ந்தார்

# ஹிந்தி சூப்பர்ஸ்டார்

ஹிந்தி திரைப்பட உலகின் முத்த கலைஞா ராஜேஷ்கன்னா (வயது69) கடந்த ஜூலை மாதம் 18 ஆம் திகதி காலமானார்.

ராஜேஷ் கன்னா 1960-களில் திரையுலகில் நுழைந் தார். 1966-இல் வெளியான "ஆக்ரி காட" படம் மூலம் அறிமு-கமானார். குறுகிய காலத்தில் புகழின் உச்சிக்குச் சென்றார். ஹிந்தி திரையுலகின் முதல் சூப்பர் ஸ்டாராக விளங்கிய அவர், காதல் மன்னனாகத் திகழ்ந்தார். ஒரு கட்டத்தில் தொடர்ச்சியாக 15 வெற்றிப் படங்களை வழங்கி, சாதனை படைத் தார். சமீப காலமாகப் படங்களில் நடிப்பதை நிறுத்திவிட்டு மும்பை யில் குடும்பத்தினருடன் வசித்து வந்தார்.

இந்நிலையில் அவருக்கு கடந்த ஏப்ரல் மாதம் உடல் நலக் குறைவு ஏற்பட்டது. அவ ரால் சாப்பிட முடியவில்லை. உடல் பலவீனமும் ஏற்பட்டது. இதையடுத்து மும்பையில் உள்ள லீலாவதி மருத்துவமனையில் கடந்த மாதம் இரண்டு முறை அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். சில நாட்களுக்கு முன் மீண்டும் உடல்நலம் குன்றியதைத் தொடர்ந்து, அதே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் வீடு திரும்பிய அவருக்கு உடல் பலவீனம் மற்றும் குறைந்த ரத்த அழுத்தம் காரணமாக வீட்டிலேயே செயற்கை சுவாசக் கருவி பொருத்தப்பட்டது.

எனினும் அது பலனளிக்காமல் அவர் காலமானார். அவர் இறந்தபோது, மனைவி டிம்பிள் கபாடியா, மகள்கள் ரிங்கி, ட்விங்கிள், மருமகன் நடிகர் அக்ஷய்குமார், பேரக் குழந்தைகள் மற்றும் உறவினர்கள் உடனிருந்தனர்.

ராஜேஷ் கன்னாவின் மறைவுச் செய்தி காட்டுத் தீயாகப் பரவியது. இதைக் கேள்விப்பட்டு மும்பை பாந்த்ராவில் உள்ள அவரது "ஆசீர்வாத்" பங்களா அருகில் நூற்றுக் கணக்கான ரசிகர்கள் கண்ணீருடன் திரண்டனர்.



ரசிகர்களால் "காகா" என்று அன்புடன் அழைக்கப்பட்ட ராஜேஷ் கன்னா 1969-ஆம் ஆண்டில் வெளிவந்த "ஆராதனா" படத்தின் மூலம் பொலிவுட்டின் முதல் சூப்பர் ஸ்டாராக உயர்ந்தார். "ஆனந்த்", "பவார்ச்சி", "அமர் பிரேம்", "ஹாத்தி மேரே சாத்தி", "சங்கம்", "ரோட்டி", "அப்னா தேஷ்", "சஃபர்", உள்ளிட்ட படங்கள் அவரைப் புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றன.

பின்னர் 1990-ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் நடிப்பை நிறுத்தி விட்டு, அரசியலில் குதித்தார் 1992-ஆம் ஆண்டு நடைபெற்ற புது டில்லி மக்களவைத் தொகுதி இடைத் தேர்தலில் காங்கிரஸ் சார்பில் வெற்றி பெற்றார். எம்.பி.யாக ஐந்து ஆண்டுகள் சிறப்பாகச் செயல் பட்டார். சமீப காலமாக அவர் அரசியலில் இருந்தும் ஒதுங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது மறைவுக்கு முன்னாள் குடியரசுத் தலைவர் பிரதிபா பாட்டீல் பிரதமர் மன்மோகன் சிங், மக்களை வைத் தலைவர் மீரா குமார், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, மத்திய அமைச்சர்கள் அம்பிகா சோனி, பரூக் அப்துல்லா, ராஜீவ் சுக்லா, மகாராஷ்டிர ஆளுநர் கே.சங்கரநாராயணன், மகாராஷ்டிர முதல்வர் பிருத்விராஜ் சவாண் தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதி உள்ளிட்ட பல தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர் "பழம்பெரும் நடிகர் ராஜேஷ்கன்னாவின் மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்" என்று தமிழக சுப்பர் ஸ்ரார் ராஜனிகாந்த் அனுதாபம் தெரிவித்துள் ளார் பொலிவுட் நடிகர்கள் அமிதாப், ரிஷி கபூர், பிரேம் சோப்ரா, தயாரிப்பாளர் சாகித் கான் உள்ளிட்ட திரையுலகப் பிரமுகர்கள் ராஜேஷ் கன்னாவின் வீட்டுக்கு நேரில் சென்று அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். அவரது மறை வுக்கு நடிகர் ஷாருக்கான், தயாரிப்பாளர் சுபாஷ் கய், நடிகை மாதுரி தீட்சித், பழம்பெரும் நடிகைகளான வைஜெயந்திமாலா, மும்தாஜ் உள்ளிட்டோர் இரங்கல் தெரி வித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org



ஈசியாக பயணிக்க எலக்ட்ரிக் கார்

அமெரிக்காவை சேர்ந்த நிபுணர்கள் கோழிமுட்டை வடிவில் ஓர் எலக்ட்ரிக் காரை வடிவமைத்து அசத்தியுள்ளனர். எதிர்கால போக்குவரத்தில் இந்தக் கார் மிக முக்கிய பங்கு வகிக்கும் என அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

எக்கசுஸ் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த காரில் ஒருவர் மட்டுமே பயணிக்கலாம். இந்தக் கார் மணிக்கு அதிகபட்சம் 40 கி.மீ . வேகம் செல்லும். ஒரு முறை சார்ஜ் செய்தால் 60கி.மீ. தூரம் வரை செல்லலாம்.

போக்குவரத்து நெரிசல் மிகுந்த நகர்ப்புறங்களில் இந்தக் காரில் எளிதாக செல்லும் வகையில் வடிவமைக் கப்பட்டுள்ளது. சாதாரண கார் நிறுத்தும் இடத்தில் 6 எக்கதூஸ் எலக்ட்ரிக் கார்களை நிறுத்த முடியும்.

5,000 டொலர் விலையில் இந்தக் கார் விற்பனைக்கு வருகிறது. ஆர்டர் செய்து இந்தக் காரை வாங்கிக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



விண்டோஸ்- 8 இயங்குதளதுடன் ஸ்மார்ட்போன்கள்

விண்டோஸ்-8 இயங்குத்தளம் கொண்ட இரண்டு ஸ்மார்ட்போன்களை நோக்கியா நிறுவனம் வருகிற செப்டெம்பர் மாதம் அறிமுகம் செய்ய இருக்கிறது.

விண்டோஸ்-8 இயங்குதளம் கொண்ட 2 ஸ்மார்ட் போன்கள் செபடெம்பர் மாதம் அறிமுகமாவதாக ஒரு தகவல் வெளியாகி உள்ளது.

நோக்கியா வழங்க இருக்கும் இந்த ஸ்மார்ட்போன்கள் நிச்சயம் விண்டோஸ் இயங்குதளம் கொண்டதாக மட்டும் இல்லாமல், இன்னும் பல நவீன வசதிகளை வழங்குவதாக இருக்கும்.

நோக்கியா நிறுவனமும் அடுத்து அடுத்து விண்டோஸ் இயங்குத்தளம் கொண்ட ஸ்மார்ட்போன்களை உருவாக் குவதில் சிறப்பாக செயற்பட்டு வருகிறது. இதனால் இந்நி றுவனம் கூடிய விரைவில் அடுத்ததாக வழங்க இருக்கும் 2 ஸ்மார்ட்போன்கள் என்னென்ன புதிய வசதிகளோடு வரும் என்பதையும் பார்க்கலாம்.

# நீயாகி போன நான்

முற்றும் துறக்காத
முடி வளக்காத
முனிவன் நான்!


உனை தொட துணிந்து
உன்னுடன் தொடர்கின்ற
நிழல் நான்!

உன்மேல் ஆசை விதைத்து
பித்து பிடித்த கவிதையின்
அரசன் நான்!

உன் முகவரி அறிய
என் முகவரி மறந்த
உன் முகவரி நான்!

உன்னை சுமப்பதற்கு
உன்னுடன் சுழலுகின்ற
புவி நான்!

என்னுள் நீயாக இருந்த நான்..
இப்போ வேறாகி போனது ஏன்?



ந. தமிழ்ச்செல்வன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org